விலை சதம்] 20


# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, வைகாசி 10 உ சனி (31-5-69) அவ்வல் 6 புத்தகம் 23 இதழ் 31



மில்க்வைற்
மெடிகேறெட் வாசனை சோப் - நீல சோப்


ஆரோக்கியத்திற்கு ஆடைகள் சுத்தத்திற்கு
உள்நாட்டு உற்பத்திக்கு அளிக்கும் ஆதரவு, நாட்டின் பொருளாதார விருத்திக்கு அளிக்கும் ஆதரவாகும்.


### இலங்கைக்கு வெளிநாடு தரும் உதவிகளில்

# தமிழ்ப் பகுதிக்கு ஓரவஞ்சனை காட்டப்படுவது உண்மை

## அமெரிக்க அதிகாரியின் அந்தரங்க அறிக்கை!

இலங்கையின் அபிவிருத்திக்கென வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் வடக்கு, கிழக்குமாகாணங்களுக்கு புறக்கணிக்கப்பட்டு வருவதாக தமிழரசுக்கட்சி குற்றம் சுமத்தியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மைதானென்றும், இவ்விரு மாகாணங்களிலும் அமெரிக்க உதவியைப் பயன்படுத்தி எவ்வித அபிவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டதாக இல்லையென்றும், இலங்கை—அமெரிக்க உதவிகளுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் அந்தரங்க அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழரசுக்கட்சி அரசாங்கத்தின் மீது சுமத்திய பகிரங்கக் குற்றச்சாட்டை அடுத்து அமெரிக்க அதிகாரியொருவர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிலைமையை நேரடியாக தரிசித்தபின்னர், மேலதிகாரிகளுக்கு இந்த அந்தரங்க அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாக தெரியவருகிறது.

இதேபோல இலங்கைக்கு உதவியளித்துவரும் பிரான்ஸ் மேற்கு ஜெர்மனி, யூகோஸ்லவேகியா, பிரிட்டன் போன்ற நாடுகளின் அதிகாரிகளும் நிலைமையை ஆராய்வதற்கு விரைவில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் படையெடுக்கவிருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது.

இலங்கையின் அபிவிருத்திக்கென வெளிநாடுகள் வழங்கும் உதவிகள் தமிழ்ப் பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கிடைப்பதில்லையென்றும், இதிலும் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்கள ஆட்சி பீடம் ஓரவஞ்சனையுடன் நடத்துவதாகவும் தமிழரசுக் கட்சி அதன் 11வது மாநாட்டில் பகிரங்கமாககண்டனம்செய்ததைத் தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகளுக்கு பொறுப்பாக உள்ள அமெரிக்க அதிகாரிகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தமது சார்பில் இரகசியமாக ஒரு அதிகாரியை அனுப்பிவைத்துநிலைமையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார்கள் என்று தெரிகிறது.

இதைத் தொடர்ந்து குறித்த அமெரிக்க அதிகாரி தமிழ்ப்பகுதி முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நிலைமையைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததாகவும் தமிழ்ப் பகுதிக்கு அமெரிக்க உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது உண்மைதானென்றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிகிறது.

இலங்கைக்கு உதவியளிக்கும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளும் தமது அதிகாரிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி நிலைமையை ஆராய்வர் என்று அறியப்படுகிறது.

### சிங்கள ஆசிரியர் அனுப்பப்பட்டால்

# எதிர் நடவடிக்கை என்ன?

## தமிழரசுச் செயலாளர் இன்று கூட்டும் மாநாடு

பெற்றோர் விருப்பம் என்ற போர்வையின் கீழ் வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்க விருக்கும் மூன்று தமிழ்ப் பாடசாலைகளிலும் சிங்களத்தைப் போதனா மொழியாக்கிட சிங்கள ஆசிரியர்களை அனுப்பிவைத்தால் அதை எதிர்த்து எத்தகைய நடவடிக்கையிலிறங்குவது?

இன்று யாழ். நகரமண்டபத்தில் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டும் மாநாட்டில் இது பற்றி முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. இம் மாநாட்டில் வடபகுதியிலுள்ள கல்விமான்கள், பெற்றோர் சங்கத்தினர், ஆசிரியர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சியின் கடுமையான எதிர்ப்பினால் பிரச்சினைக்குரிய மூன்று தமிழ்ப் பாடசாலையும் சிங்களப் பாடசாலைகளாக மாற்றுவது என்ற முந்திய முடிவை கல்வியமைச்சு கைவிட்டுள்ளபோதிலும், படிப்படியாக அப்பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக மாற்றும் சூழ்ச்சி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

பெற்றோர் விருப்பம் என்ற போர்வையின் கீழ் சிங்களத்தை தமிழ்ப் பாடசாலைகளின் போதனா மொழியாக்கலாம் என்று கல்வியமைச்சு இப்பொழுது எதிர்பார்ப்பதாக தெரிகிறது. சிங்களத்தை போதனா மொழியாக ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக குறித்த பாடசாலைகளில் கல்விபயிலும் பிள்ளைகளின் ஏழைப் பெற்றோர்களுக்கு பல ஆசை வார்த்தைகள் கூறப்படுகிறதாம்

சிங்களத்தை போதனா மொழியாக ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு பல சலுகைகளும், வசதிகளும் செய்து தரப்படுமென்றும், பிள்ளைகளின் படிப்பு, புத்தகச் செலவுகளை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்றும் கல்விப் பகுதியைச் சேர்ந்த சில பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும், கல்வியமைச்சரின் கையாட்களும், பொய்ப் பிரசாரத்திலீடுபட்டு வருகின்றனராம்.

இதே நேரத்தில், சிங்களத்தை போதனா மொழியாக ஏற்றுக் கொள்ளுகிறோம் என்ற கருத்துப்பட ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்ட காகிதத்தில், பாடசாலைகளை கல்வியமைச்சு பொறுப்பேற்க வேண்டுமானால் இதில் கையெழுத்துப் போடுங்கள் என்று பெற்றோர்களை ஏமாற்றி கையெ

(9ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தினசரிக்கு விரைவில் மூடுவிழா?

கொழும்பிலிருந்து வெளிவரும் காலைத் தமிழ்த் தினசரியொன்றுக்கு விரைவில் மூடுவிழா நடக்கலாமென்று பேச்சடிபடுகிறது. இன்னும் நான்கு மாதங்களுக்கிடையில் இது நடைபெறலாமாம்.

தமிழரசுக் கட்சியைப் பற்றி பொய் புரட்டுக்களை வெளியிட்டு வரும் இத்தினசரியைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க ஆரம்பித்ததினால் இதன் விற்பனை அதலபாதாளத்துக்கு சரிந்துவிட்டதாம்.

# தமிழர் பேசும் பேச்சா இது?

## உடுப்பிட்டி எம். பி. க்கு ம. பொ. சி. சாட்டை

"இலங்கைத் தமிழரசுக்கட்சி மாநாட்டுக்கு இந்தியத் தலைவராகிய என்னை அழைத்தது தவறென்று இலங்கைப் பாராளுமன்றத்தின் உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் அவர்கள்பேசிய பேச்சை இலங்கைப் பத்திரிகையொன்றில் பார்த்தேன். வியப்பும் வேதனையும் அடைந்தேன். பேசியிருந்தவர் தமிழர்: தமிழர் காங்கிரசைச் சேர்ந்தவர். அவரா இப்படிப் பேசுவது? தமிழர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் கலாசார ரீதியில் ஒன்றுபட உரிமை பெற்றவர்கள்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியார் தங்கள் இலக்கிய மாநாட்டுக்கு என்னை அழைத்தார்கள். நானும் இலக்கியத்துக்குப் புறம்பான அரசியல் எதையும் பேசவில்லை. அரசியல் கட்சியொன்று இலக்கிய மாநாடு நடத்துவதோ இலக்கிய ரீதியில் அயல் நாட்டுத் தமிழரைக் கௌரவிப்பதோ தேசபக்தியற்ற செயலாகி விடாது. உயர் பதவியிலுள்ள சிவசிதம்பரமவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

"தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் நான் இலங்கை வந்ததற்கு மகிழ்ச்சியடைந்தார். நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து என்னைப் பார்த்துப் பேசினார். தம் இல்லத்துக்கும் அழைத்து விருந்து வைத்தார். அப்போது நான்

(9ம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம் (20)

மனச் சாட்சியுள்ள மனிதனிடம் எத்தனைதான் துணிவு இருந்தாலும் ஒரு தீய செயலைச் செய்ய எத்தனிப்பது அவ்வளவு சுலபமானதல்ல. அதை ரகுவும் உணர்ந்து கொண்டான். அவன் குறிப்பிட்ட இடத்தில் இறங்கி விட்டான் செல்ல வேண்டிய முகவரியும் அவன் கையிலேயே இருந்தது. கொழும்பில் இத்தனை மாதங்களைக் கழித்தபின் இப்படிப் பிரபலமான ஒரு நபரின் வீட்டைக் கண்டுபிடிப்பது அவனுக்குப் பெரிய கஷ்டமல்ல, ஆனால் அவன் பொய் சொல்லி ஒருவரை ஏமாற்ற விரும்பவில்லை. அதனால் சிந்தித்தபடியே அவன் அவ்விடத்திலுள்ள தெருக்களையெல்லாம் சுற்றித் திரிந்தான்.

ஒருவித குறிக்கோளுமின்றிச் சுற்றித் திரிந்தபின் அவன் திரும்பவும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து தன் மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்தான். இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டிருந்தது. பவானி கூறியது அவன நினைவுக்கு வந்தது. எதுவிதப்பட்டும் சீக்கிரமாக வீடு திரும்பிவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே குறிப்பிட்ட முகவரியைத் தேடிச் சென்றான். வழியில் இரண்டொருவரிடம் விசாரித்து வீட்டையும் கண்டு பிடித்துவிட்டான். இனி அந்த வீட்டுக்குள் என்ன காரணத்தைக் கொண்டு உட்செல்வது என்பதுதான் அவனது அடுத்த பிரச்சினையாக இருந்தது.

அந்த வீட்டடியில் சில நிமிடநேரம் நின்று சிந்திக்கத் தொடங்கினான் ரகு. வீடு பார்ப்பதற்குப் பெரிதாக இருந்தது. ஆயினும் ஜனசந்தடி குறைவாகவே தெரிந்தது. வழமையாகப் பணக்கார வீடுகளில் காணப்படும் காவற்காரனாகிய நாயைக் கூட அங்கு காணவில்லை. அதற்குப் பதிலாக வீட்டில் மயான அமைதி குடிகொண்டிருந்தது. ரகு மெதுவாக [illegible] திறந்து கொண்டு பதுங்கிப்பதுங்கி உள்ளே நுழைந்தான். வெளிமுற்றத்தில் மரங்கள் சோலையாக வளர்ந்திருந்தால் யாராவது வந்தால் அந்த மரங்களினூடே மறைந்து கொள்ளலாம் என நினைத்துக் கொண்டு அவன் துணிவாக நடக்கத் தொடங்கினான்.

வீட்டுத் திண்ணையை நெருங்கியபோது அங்கே யாரோ விசும்புங்குரல் கேட்டு அங்கேயிருந்த ஜன்னலினூடாக அவன் உள்ளே பார்த்தான். சத்தங்கேட்டதே தவிர அந்த அழுகைக்குரிய நபரை அவனாற் கண்டு கொள்ள முடியவில்லை. ஆயினும் அந்தக் குரலுக்குரியவள் ஒரு பெண் என்பதை மட்டும் அவனால் உணர முடிந்தது. அதைத் தொடர்ந்து திடீரென குடிவெறியில் யாரோ உழறுவது போன்ற ஓசைகேட்கத் அவன் தன் காதுகளைச் சற்றுக் கூர்மையாக்கித் கேட்க தொடங்கினான்.

யாரோ ஒரு ஆண்பிள்ளை நல்லகுடிபோதையில் பிதற்றுகிறான் என்பது நிட்சயமாகியதும் தான் வேறு யாருடையவோ வீட்டுக்கு மாறி வந்துவிட்டதாக நினைத்து வந்த சுவடு தெரியாமற் திரும்பிச் சென்று தெருவோரமாக நடக்கத் தொடங்கினான். அப்போது யாரோ ஒரு முதியவர் அவ்வழியாக வரவே அவரிடம் சென்று அதுஜெயநாதனின்வீடுதானா என்று நிட்சயப்படுத்திக் கொள்ளத் துணிந்தான்.

அவன் கேட்ட வினாவுக்குப் பெரியவர் சிரித்து விட்டு நீ யாரப்பா இந்த ஊருக்குப் புதிய ஆள்போலத் தெரிகிறது. அல்லது இந்த நேரங்கெட்ட நேரத்தில் அந்த வீட்டுக்குப் போயே இருக்க மாட்டாய். காலை ஆறுமணி தொடக்கம் மாலை ஐந்துமணி வரையுந்தானப்பா அந்தஆள் மனிதனாக நடமாடும்நேரம் இரவு முழுதும் அவன் மிருகமாக மாறிவிடுவான். அவ்வளவு குடி... பணம் இருக்கு அழகான மனைவி இருக்கிறாள என்ன இருந்தும் என்னபபா ...மனிதன் மனநிம்மதியற்றுத் தவிக்கிறான்...பாவன் அந்தப் பெண். அதுதான் அவன் மனைவி. என்னபாவஞ் செய்து அவனுக்கு மனைவியாச்சுதோ...? ஒரே அடியும் உதையும் தான்...ம்...என்ன செய்வது...... ஒவ்வொருவரும் செய்தவற்றை அநுபவித்துத் தானே ஆகவேண்டும். நல்ல காலம் நீ புத்திசாலித்தனமாக வெளியில வந்திட்டாய். பொறுத்ததோடு பொறுத்ததாக நாளைக்குக் காலையில் வந்து பார் மனிதன் நல்லவன். என்ன உதவி கேட்டாலும் செய்வான்... சரி எனக்கு நேரமாகுது நான் வாறன்' என்று கூறி விட்டுச் சென்றார்.

ரகுவுக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது. ஜெயநாதனைச் சென்று காண்பதா விடுவதா என்ற புதியதோர் பிரச்சனை அவன் மனதில் உருவாகியது. பவானியையும் குழந்தையையும் இப்படியான ஒரு குடிகாரனிடம ஒப்புவிக்க அவன் மனம் உடன்படவில்லை. அதைவிட அவன் இப்போதிருக்கும் நிலையில் இருப்பது மேலாகப்பட்டது அவனுக்கு. புழுதிபடாமல் தன் மார்பிலுந தோளிலுமாக வளர்ந்த குழந்தை உமா இந்தக் குடிகாரனிடம் வந்து என்ன துயர்ப்பட வேண்டிவருமோ என்பதை நினைத்துப் பார்க்கவே அவன மனம் புண்ணாகியது. பேசாமல் திருபபி விடுவோமா என்று எண்ணியவன் சிந்திக்கத் தொடங்கினான்.

தந்தைபெயர் தெரியாத தலயன என்ற அவப்பெயரோடு வாழ்வதை விடக் குடிகாரப் பயல ஒருவனின் மகன என்ற பெயர் தேவலைப் போலத் தோற்றியது அவனுக்கு. எவ்வளவுதான் கெட்டவனாக இருந்தாலும் அவனுடன மனம்விட்டுப் பேசினால்தான் பவானியின் வாழ்வுக்கு ஒரு விடிவு ஏற்படும் என அவன் நிடசயமாக நம்பினான். அந்தப் பெரியவர் கூறியது போல ஜெயநாதன் நலலவனாக இருந்தால் எதற்காக இவன் இப்படிக் குடிககவேண்டும்? ஒருவேளை பவானியைப் பிரிந்த துயர்தான் அவனை இப்படிக் குடிக்க வைத்ததோ...? அப்படியும் இருக்கலாம். உமாவைப் பிரிந்தபோது நான் எவ்வளவு துனபப்பட்டேன். வளர்த்தவரை மறந்து ஊர் தேசததை மறந்து உற்றாரைத் துறந்து வரவில்லையா? ஏன் என் உயிரைக் கூடத் தான் துறந்து விட முயற்சித்தேன. பவானியின் அன்பு மட்டும் எனக்குக் கிடைத்திருக்காவிட்டால என்னை புதைத்தஇடத்தில் இதுவரை புல்முளைத்திருக்கும் 'ஜெயநாதனின் வாழ்க்கையிலுங் கூட இப்படி ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்திருக்ககலாம். எதற்கும் அவனைப் பார்க்காமல் இன்று போவதில்லை என்று நிட்சயித்துக் கொண்டு திரும்பவும் அந்த வளவுக்குள் காலடி எடுத்து வைத்தான்.

இம்முறையும் அவன் அடர்ந்திருந்த சோலைகளின் நடுவே மற்றவர்கள் தன்னை எளிதாகக் கண்டு கொள்ள முடியாதபடி மறைந்து கொண்டான். சன்று முன் அன் அங்கே வந்த போது கேட்ட அழுகைக் குரல்மறைந்து இப்போது ஓர் ஆண்பிள்ளையின் அனுக்கமான குரலே கேட்டுக் கொண்டிருந்தது. அந்தக்குரலுக்குரியவன் ஜெயநாதனாகத்தான் இருக்க வேண்டுமென அவன் தீர்மானித்தான். அது குடிவெறியால் களைத்துப் போயிருப்பவனின் பரிதாபக் கதறலாக அவனுக்குப்பட்டது.

நமது தொடர்கதை

திடீர் என பவானியின் தோற்றம், அவன் கண் முன்னே தோற்ற மளிக்கிறது.என்னண்ணா நீ வந்த விடயத்தை மறந்து விட்டாயா...?என்று அறிவுறுத்துவது போல இருக்கிறது. அவன் தன் நினைவு பெற்று இம்முறை சற்றுக் துணிவுடன் வீட்டுத் திண்ணையில் காலடி எடுத்து வைத்து விடுகிறான். திடீர் என அங்கே பெரிய ஓங்காளங் கேட்க அதை தொடர்ந்து சத்தி எடுக்கும் ஆரவாரமும் கேட்கிறது. பக்கத்தில் இருந்த தூணோடு தூணாக ரகு தன்னை மறைத்துக் கொள்கிறான். திரும்பவும் அங்கே குடிவெறிப் பிதற்றலும் அதைத் தொடர்ந்து ஒரு பெண்ணின் விசும்பலும் கேட்கின்றன. இப்போது ரகுவுக்குஜெயநாதனின்மேல் கோபம்கோபமாகவருகிறது அவனால் காதலித்த பெண்ணுக்கும் நிம்மதியில்லை கைப்பிடித்த பெண்ணுக்கும் நிம்மதியில்லை என்ற எண்ணம் எழுந்ததும் அவனைக் கொலை செய்து விட்டாற்கூடத் தேவலைப்போலத் தோற்றியது ரகுவுக்கு. தான் நின்ற இடத்திலேயே சிறிது நேரம் நின்று பார்த்த ரகு ஒரு பெண் அழுதுகொண்டே உட்புறமாக வெளியே செல்வதைக் கண்டதும் மிகவும் விரைவாக ஜெயநாதன் படுத்திருந்த இடத்தை அடைந்தான்.

ஜெயநாதன் படுத்திருந்த இடத்தை நெருங்கியபோது அங்கே வீசிய துர்நாற்றத்தைத் தாங்கமுடியாமல் ரகு தன் மூக்கை இறுக்கமாகப் பொத்திக்கொண்டான். அந்த இடம் முழுவதும் கால் வைக்க முடியாதபடி சத்தி தேங்கிப்போயிருந்தது. தன் நினைவற்று வாயில்வந்ததையெல்லாம்பிதற்றிக்கொண்டு படுத்திருந்தான் ஜெயநாதன். அவனை அப்படியே பிடித்துக் கழுத்தை நெரித்துக்கொன்றுவிடுவோமா என்று யோசித்த ரகு தன் [illegible] கொண்டான். இப்படியான ஒரு கேவலமான நிலையில் மிருகத்தைவிட இழிவாக ஒரு மனிதன் சீவப்பதைவிட அவன் இறந்துவிடுவதில் தப்பில்லை என்று தோற்றியது அவனுக்கு. ஆனால் அவனை எப்படிச சாகடிப்பது. ஏற்கெனவே நினைத்ததுபோல அவனது கழுத்தை நெரித்துக்கொன்றுவிடலாந்தான்...ஆனால் கொலைசெய்வது அவ்வளவு சுலபமல்லவே...அவன் கிடக்கும் நிலையில் அவனுடன் எதையும் பேசித் தீர்த்துக்கொள்ளமுடியாது என்பதும் ரகுவுக்குப் புரிந்தது. அவனுக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது. இநதப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பதென அவன் யோசித்தான்.

நீண்டநேர சிந்தனைக்குப் பின் அவனால் ஒரேயொரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது. வீட்டுக்குச் சென்று பவானியை அழைத்து வந்து இவன்இருக்கும்நிலையைபவானிக்குக் காட்டினால் அதன் பின்பாவது இவனை அவள் மறக்க முயற்சிப்பாள்.மறக்க முடியாவிட்டாலுங்கூட அவன் மேல் ஏற்றி வைத்திருக்கும் உயர்ந்த அபிப்பிராயத்தையாவது மாற்றிக் கொள்ளலாம்எனயோசித்து விட்டுத் திரும்பிச் செல்ல நினைத்தபோது உள்ளேயிருந்து யாரோ வரும் காலடியோசை கேட்டுஅவன் விரைவாகச் சென்று தான் முதலில் ஒழித்து நின்ற இடத்திலேயே நின்றுகொண்டான்.

மாலைப்போது பகற்போதை சிறுகச்சிறுக விழுங்கிக்கொண்டிருந்தாலும் எங்கும் இருள் கவிந்து கொண்டுவந்தாலும் அந்த வீட்டில் அதுவரை ஒரு கைலாம்புகூட ஏற்றப்படாமல் இருந்ததாலும் ரகுவுக்குத் தன்னை மறைத்துக் கொண்டு அங்கே நடப்பவற்றைக் கவனிப்பது மிகவும் சுலபமாக இருந்தது. அங்கே வந்துகொண்டிருந்தவள் ஒரு பெண் என்பதும் அவள் தான் முதலில் அங்கே அழுது கொண்டிருந்தவளாக இருக்க வேண்டும் என்பதும் அவள் விட்ட பெருமூச்சில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

இருட்டில் அவளை நன்றாகப் பார்க்கமுடியாவிட்டாலுங்கூட அவள் தேகம் மிகவும் மெலிவுற்றிருந்ததை அந்த இருட்டிலும் அவனால் கவனிக்கமுடிந்தது. தலைவாரப்படாமல் கேசம் அங்குமிங்கும் கலைந்திருக்க அவள் உடலை ஒரு கந்தைத் துணி அலங்கரித்திருந்தது. அவள் அங்கு வந்த சிலநிமிடநேரத்திற்கெல்லாம் திண்ணையில் தண்ணீர் ஊற்றப்படும் சத்தங் கேட்டது. அடுதது விளக்குமாறால் சுத்தஞ் செய்யும் சததங் கேட்டது. பாவம யாரபெற்ற அப்பாவிப் பெணணோ இந்தக் குடிகாரப பயலைக கட்டிக கொண்டு இப்படி உத்தரிக்க வேணடியிருக்கிறதே என அந்தப பெண்ணுக்காகக் கவலைப்பட்டான அவன். அந்த நேரம் அவன் பவானியையும் நினைத்துக்கொளளாமல இல்லை.

பவானியைப போன்ற ஒரு அப்பாவிப் பெண்ணை இப்படியான ஒரு குடிகாரனிடம் [illegible]டைத்தால் அவள் நிச்சயமாகத் தற்கொலைதான் செய்து கொள்ள வேண்டி வரும். அதனால் அவள் வாழாவெட்டியாக இருந்தாலுங்கூட இப்படியானவொரு குடிகாரனுக்கு மனைவியாகியிருக்க வேண்டாமெனத் தன் மனதைச் சாந்திப் படுத்திக் கொண்டான் ஆயின் குழந்தை உமாவின் வருங்காலத்தை உத்தேசித்து எப்படியாவது இந்த மனித மிருகத்தைச் சந்திந்து இரண்டொரு வார்த்தை சுடச்சுடப் பேசினாற்தான் நிம்மதி ஏற்படும் போலிருந்தது அவனுக்கு.

ரகுவின் கவனம் முழுவதும் தற்போது அந்த அறையிலேயே பதிந்து கொள்கிறது. அங்கே வந்து கொண்டிருந்த பெண் இவனுடைய மனைவி தானா என்பதைக் கண்டு கொள்ள அவன் உள்ளந் துடிக்கிறது. கழுவும்வேலை முடிந்ததும் அவள் அந்த மனிதன் படுத்திருந்த பக்கமாகச் சென்று சிலநிமிட நேரம் அவனையே உற்றுப் பார்ப்பதுபோல ரகுவுக்குத் தெரிகிறது. அவனது கலைந்த கேசத்தை அவள் தடவிக் கொடுக்கும் போது ரகுவின் சந்தேகம் அறவே தெளிந்து விடுகிறது.

தொட்டுத் தாலிகட்டிய மனைவியைவிட வேறு எந்தப் பெண்ணுக்கும் இவ்வளவு பொறுமையிருக்க முடியாது என அவன் மனம் முடிவு செய்யும் போது அப்படியே ஓடிச் சென்று அந்தப் பெண்ணின் காலடியில் விழுந்து அவளைத் துதித்துப் போற்ற வேண்டும் போல இருந்தது அவனுக்கு. ஆனால் திடீர் என தன்னைப் போன்ற ஓர் இளைஞன் இந்தச் சூழ்நிலையில் அவள் முன்செனறு நிற்பதாக இருந்தால் அவனைப் பற்றி மிகவும் கேவலமாகத் தான அப்பெண்ணால் நினைக்க முடியுமே தவிர அவனது நல்லெண்ணத்தை அவளால் புரிந்து கொள்ளவே முடியாது என நினைத்துத் தன் எண்ணத்தை மாற்றிக கொண்டான்.

அந்தப் புனித உள்ளம் படைத்த பெண்ணினது முகத்தையாவது ஒரு முறை பார்க்கலாம் என்றால் அந்த வீட்டில் இன்னும் வெளிச்சம் ஏற்படாததால் அந்த ஆசையைக்கூட அவனால் நிவர்த்தி செய்து கொள்ள முடியாமல் இருந்தது. இன்னுஞ் சிறிது நேரம் இருந்துதான் பார்ப்போமென அவன் பொறுத்திருந்த வேளை மீண்டும் அந்த மனிதனின் முனகல் கேட்டது. கூடவே ஏதோ சில வார்த்தைகளும் குளறுபடியாகக் கேட்டன. ஆனால் அந்த வார்த்தைகளை எளிதாக ரகுவினால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறிதுசிறிதாக அந்த ஆண் குரல் உச்சஸ்தாயியில் எழுந்து கொணடேயிருந்தது. அதன பின் அந்த வார்த்தைகள் ஓரளவுக்கு அவனுக்குத் தெளிவாகக் கேட்டன. ''டீ...ஏடியே... அவள்... இன்னைக்கும் வரல்லையா... நீ... எ-ப-போ... போய் தொலையறது... என்ர... ப...வா...னி... எப்போ வாறது... அ...வ...ள் இல்லாமல... நான்... வாழ... முடியாது... இப்படியே... குடித்துக் குடித்துச் செத்... துப் போவனடி... நான்... சா...கிறது... உனக்கு

(9ம் பக்கம்பார்க்க)

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்?

## திருவாளர் குயுக்தி

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு.

கே: தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தினர் வடபகுதியில் சிங்களப் பாடசாலைகளை ஆதரிப்பதேன்?

ப: தீண்டாமை யொழிப்பு அவர்களது உண்மையான நோக்கமல்ல — தீண்டாமை யொழிப்பு என்ற போர்வையில் தமிழினத்தை பிளவு படுத்தி ஒழிப்பதே அவர்களது நோக்கம்!

கே: ஐக்கிய தேசியக் கட்சி வடபகுதியில் போட்டியிடுவதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகின்றனவே உண்மையா?

ப: தமிழ் காங்கிரஸ் யூ. என். பி.யின் கிளையாக இருக்கும்போது இது நடக்குமா?

ஃ

ஐ: நடேசன்,
நெல்லியடி.

கே: 'நான் யார்' கட்டுரை எழுதிய தமிழ்வாணன் யாழ்ப்பாணம் ஏன் வரவில்லை?

ப: அவர் யார் என்பதை யாழ்ப்பாணமக்கள் தெரிந்து கொண்டுவிட்டதால் ஏற்பட்ட அச்சத்தாலிருக்கலாம்!

ஃ

ப. ஆறுமுகதிலகர்,
காரைநகர்.

கே: மனைவியின் சொற்படி நடக்கும் கணவன்மாரின் கோழைத்தனத்தைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நல்ல மனைவி ஒரு நல்ல மந்திரியைப் போன்றவள், அப்படிப்பட்ட மனைவியின் ஆலோசனையைக் கேட்டு நடக்கும் கணவனைக் கோழையென்று கூறிவிட முடியாது. ஆனால் மனைவிக்கு பெட்டிப் பாம்பாக அடங்கி அவளது தவறான போக்கைக்கூட கண்டிக்க முடியாத கணவன் கோழைதான். அவனால் அவனது குடும்பத்துக்கும் சரி' நாட்டுக்கும்சரி தீமையே தவிர நன்மை கிடையாது.

கே: தமிழரசார் சாதித்தது என்ன என்று கேட்பவர்களுக்கு கூறக்கூடிய சுருக்கமான பதில் என்ன?

ப; தமிழினம் இந்நாட்டில் இன்னும் அழிந்து விடாதபடி காப்பாற்றி வைத்திருப்பதே தமிழரசுக் கட்சியின் சாதனைதான்!

ஃ

எஸ். சுப்பிரமணியம்,
கொழும்பு.

கே: மலேசிய இனக்கலவரம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இது எதிர்பார்க்கப்பட்டதுதான். மலேயர்களுக்கும் சீனர்களுக்கும் நீண்டகாலமாக உள்ளே புகைந்து கொண்டுவந்த எரிமலை இனக்கலவரமாக வெடித்துள்ளது. பல இனங்கள் வாழும் போது ஒருமொழியைமட்டும் ஆட்சி மொழியாக்கினால் இதே நிலைமைதான். மலாய் மட்டும் ஆட்சிமொழியாக்கப்பட்டது சீனர்களுக்கு ஆத்திரம். அதே நேரத்தில் உத்தியோக தொழில வாய்ப்புக்கள் சீனர்களிடம் இருப்பது மலாயர்களுக்கு குடைச்சல். இதுவே இனக்கலவரமாக முகிழ்த்தது. ஒரு நாட்டில் வாழும் வெவ்வேறு இனங்களிடையே அதிருப்தியும வெறுப்பும் வளர்ந்து வருவது நாட்டுக்கு நல்லதல்ல. மலேயா கலவரம் சிங்களப் பெரும்பான்மையினருக்கு ஒரு பாடமாக அமையவேண்டும்!

ஃ

சிறீதரன்,
கரவெட்டி

கே: தேர்தல் காலத்தில் மூன்று மாதத்தில் உரிமை பெற்றுத் தருவேன் என்ற 65 பவுண் தங்கமாலை புகழ் பொன்னர், இம்முறை தொகுதி மாற்றம் செயயப் போகிறாராமே, அவ்வாறாயின் பழம் பொன் புதுப் பொன்னாகுமா?

ப:- அது பொன்னல்ல, வெறும் கில்ட் பண்ணிய பித்தளை என்பதுதான் பொது மககளுக்குத் தெரிந்து விட்டதே இனியும் ஏமாற மக்கள மூடர்களா என்ன?

ஃ

கே. இராமானுஜம்,
அட்டன்.

கே: வடபகுதியில் சிறுபான்மைத் தமிழ[...] ளின் தொண்டை[...] களத்தை திணிப்பதை தொண்டைமான் காங்கிரஸ் வரவேற்றிருப்பது எதைக்காட்டுகிறது?

ப:- மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களம் திணிக்கப்பட்டாலும் அதை இருகரம் நீட்டி அது வரவேற்கும் என்பதை!

ஃ

ப. ஆறுமுகதிலகம்
காரைநகர்.

கே. நீர் இலங்கையின் பிரதமரானல்...?

ப: கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமுடியாத நிலை ஏற்பட்டபின்பும் டட்லியைப் போல பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன்!

கே; திரு.பண்டாரநாயகா இன்று உயிரோடிருந்தால்...?

ப. பண்டாரநாயகாவின் பெயரைச் சொல்லி கூட்டுக் கட்சிகள் இன்று பிழைத்துக் கொண்டிருக்க முடியாது!

கே: இலங்கையில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டால்...

ப: அதுவும் சிங்கள சர்வாதிகாரமாகவே இருக்கும்!

கே: இலங்கை அணுக் குண்டு தயாரித்தால்...?

ப: இங்குள்ள சில அரசியல் தலைவர்களின் தலையில் முதலில் போட்டு உடைத்து விடலாம்;

ஃ

சண்முகநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: தமிழரசு மாநாட்டில் ஆக 5000க்கும் குறைவானவர்களே பங்கு பற்றியதாக சீனசார்பு கம்யூனிஸ்ட்தலைவரான சண்முகதாசன் கூறியிருக்கிறாரே!

ப: ஆமாம், தமக்கென சொந்த சிந்தனையின்றி மாவோ சிந்தனையிலேயே உழலும் மண்டூகங்களுக்கு உண்மையை நேரடியாகத் தரிசிக்க துணிவேது? காகம் வெள்ளை என்று ஒரு முட்டாள் கூறினால் சொன்னவன் தான் முட்டாளே தவிர காகம் வெள்ளையாகிவிடுமா?

ஃ

கே. முரளிதரன்,
சுந்தரோடை.

கே: பொன்னம்பலத்தைப் பற்றி 'பொய்ப்பிரசாரம்' செய்துள்ள 'இம்மத்' என்ற இந்தியப்பத்திரிகை பற்றி ஏதாவது உங்களுக்கு தெரியுமா?

ப: தார்மீக புனருத்தாரண இயக்கம் என்று கூறப்படும் எம். ஆர். ஏ. சார்பில் வெளிவருவதுஇப்பத்திரிகை. இதே பத்திரிகைதான் ம. பொ. சி. தமிழரசு மாநாட்டில் கலந்துகொண்டதற்கும் கண்டனம் தெரிவித்தது. எம். ஆர். ஏ. இயக்கம் அமெரிக்கப் பணத்தில் இயங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜண்ட். ஆகவே, அமெரிக்காவின் ஊதுகுழலான 'இம்மத்' இலங்கையில் அமெரிக்காவின் அடிவருடிகள் என்று கருதப்படும் முதலாளித்துவக் கட்சியான யூ. என். பி. யையும் அதன் கிளை இயக்கமான தமிழ் காங்கிரசின் தலைவரைப் பற்றியும் புகழ்பாடுவதில் ஆச்சரியமில்லையே!

ஃ

பி. யோகானந்த்
உடுப்பிட்டி.

கே: தமிழரசுக் கட்சியினர் [...] வும் ஊர்தாவழுறை [...] ம். பி நவரத்தினத்துக்கு சந்தேமாய் இருக்கிறதாம் ஏன்?

ப; காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக தோன்றுவதில்விப்யபென்ன?

ஃ

ஈழதாசன்,
கைதடி.

கே: சிங்கள மக்கள் சமஷ்டிக் கட்சியையும் அதன் கொள்கைகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதனால் முதலில் அவர்கள் சமஷ்டிக் கொள்கையைக் கைவிட வேண்டுமென்று திருவாளர் பீத்தர் கெனமன் புத்திமதி கூறியிருக்கிறாரே இது எது போன்றது?

ப: தொட்டுத் தாலி கட்டிய மனைவியைப் பற்றி மாற்றார் சிலர் கேவலமாக நினைப்பதால், அவளை உடனே விவாகரத்து செய்யும் படி அவளது கணவனிடம் ஆலோசனை கூறி குடும்பத்தை குலைக்க முயலும் சண்டாளனின்கூற்றுப்போல இருக்கிறது பீத்தல் கெனமனின் பேச்சு. பரங்கியரான பீத்தல் கெனமன் ஒரு வேளை விவாகரத்துக்குஉடன்படலாம். ஆனால் தமிழரசுக் கட்சி என்னும் தமிழ்க் கணவன் ஊராா பேச்சை கேட்டு தான் கைப்பிடித்த சமஷ்டி மங்கையை எக்காலத்தும் கைவிடமாட்டான். அப்படிச் செய்வது தமிழ்ப் பண்பாடுமல்ல!

திருவாளர
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

---

# வாசகர் கருத்து

சுதந்திரனே! நீ இளமை குன்றாது ஈழநாட்டில்வெற்றி நடைபோடுவதில் வியப்பென்ன? பா. பாலேஸ்வரி போன்ற அனுபவமிக்க எழுத்தாளர்களின் ஆதரவு இருக்கும்போது:

—இ. தர்மபாலன்.
நெடுங்கேணி.

மாணவர் அரங்கை தொடர்ந்து வெளியிடுங்களேன்!

—ஐ. நடேசன்.
நெல்லியடி.

★ சுதந்திரன் 16 பக்கங்களில் மலரும்போது உங்கள் ஆசை நிறைவேறும்.

தமிழரசு மாநாட்டில் பாடப்பட்ட 'எங்கள் எதிர்காலம்' கவிதைகளை சுதந்திரனில் வெளியிட்டாலென்ன?

—தமிழ் அன்பன்.
கொழும்பு-6.

★ முயற்சிக்கிறோம்.

தமிழ்வாணன் மீது உங்களுக்கு ஏன் இத்தனை துவேஷம்? இலங்கை வந்தவருக்கு நீங்கள் அளிக்கும் வரவேற்பா இது?

—க. காமாட்சி
பதுளை.

★ இலங்கை வந்த இடத்தில் அதிகப் பிரசங்கித்தனமாக அவர் உளறுவானேன்?

எனது கட்டுரை, கவிதை என்னாயிற்று?

—சீ. பொ. சாந்தகுமார்.
கந்தர்மடம்.

★ இடம் கிடைக்கும் போது பிரசுரமாகும்.

தோழனுக்கு கடிதம் பலே பலே! நண்பன் கோவைக்கு எனது வாழ்த்துக்கள்.

—இ. ராமலிங்கம்.
கொழும்பு.

'எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாட்கள்' இறுதிக் கட்டுரையில் ஒரு இடத்தில் தொடர்பு முறிந்து போகிறதே ஏன்?

—செல்வி க. விஜயலட்சுமி

★ ஆமாம். அதில் இரண்டு பந்திகளை பக்கம் கட்டும்போது நமது அலுவலக 'போர்மன்' விழுங்கிவிட்டார்!

---

துள்ளிவருகுது வேல்!

# வண-ஜேம்ஸ் மேதரும் இனமாற்றமும்!

**வண** ஜேம்ஸ், மேதர் (தலைவர் மெதடிஸ்ட் திருச்சபை) அவர்கள் 21—5—69 தினபதியில் தமிழரசுக் கட்சியைக் கலைத்து விட்டு ஒரு தேசியக் கட்சியில் சங்கமமாக வேண்டுமெனக் கோழைத்தனமான போதனையைக் கூறுகின்றார்.

அவரது இனப்பற்றற்ற பைத்தியக்காரத்தனமான போதனையைத் தமிழ் மக்கள் கவனத்திற்கு எடுக்கமாட்டார்களானாலும், தேசியம் என்ற போர்வையில் தமிழினத்தைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் தீயசக்திகளுக்கு அவர் உடந்தையாக இருப்பதை எந்தத் தமிழனும், குறிப்பாகக் கிறீஸ்தவத் தமிழர்கள் சகிக்கமாட்டார்கள்.

மதத்தைப்போதிப்பதற்காகத் துறவறத்துள் புகுந்தவர், தமிழினத்தை ஒழிப்பதற்குப் போதனை செய்வதற்குத் திருச்சபை அதிகாரம் வழங்கியுள்ளதா? அல்லது கிறிஸ்வத் தமிழர்கள் அனுமதி கொடுத்தார்களா?

கனடாவில் பெரும்பான்மையினரான ஆங்கிலேயரும் சிறுபான்மையினரான பிரெஞ்சுக்காரரும் மதத்தால் ஒரு வகையினராக இருந்தும் இனத்தால் கலாசாரத்தால் வேறுபட்டிருப்பதினால் பல ஆண்டுகளாகப் போராடி ஆங்கிலமும் பிரெஞ்சுமொழியும் சம அந்தஸ்துடன் இணைப்பு ஆட்சியில் இப்பொழுது விளங்குகின்றதே! கொழும்பிலிருக்கும் தூதுவர் அலுவலகத்தில் ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் சமநிலையில் பாவிக்கப்பட்டுவருவதைப்போதகர் கவனிக்கவில்லையா?

கிறீஸ்தவ மதக்கோட்பாடுகளுடன் வாழ்ந்த அயர்நாட்டுமக்கள் ஒரு நூற்றாண்டு காலமாக ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடி விடுதலை பெறவில்லையா? அந்த ஆங்கிலேயரை பல ஆயிரக்கணக்கில் குடியேற்றி வட அயர்லாநதைப் பிரிக்கவில்லையா? மதக்கோட்பாடுகளால் ஒன்றுபட்ட ஆங்கிலேயருக்கும் ஐரிஷ் மக்களுக்குமிடையில் இப்பொழுது இனக் கலவரம் ஏற்பட்டிருப்பதை நீங்கள் அறியவில்லையா?

இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில், உருது மொழி பேசும் இஸ்லாமிய மக்கள் போராட்டம் நடாத்துவது உங்களுக்குத் தெரியவில்லையா?

கம்யூனிசத்தால் ஒன்றுபட்ட சோவியத் ருஷ்யாவும், மக்கள் சீனவும் ஒன்றையொன்று தாக்கியுள்ளது எதற்காக?

பௌத்த குருமாராவதற்குக் கூடச் சாதிக் கட்டுப்பாடு இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாதா?

பௌத்த சிங்கள மக்களிடையே தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகள் கொடுக்கப்படவில்லையென்பது உங்களுக்குச் தெரியாதா?

சிங்கள மொழியை தாய்மொழியாகக் கொண்ட பௌத்தரல்லாவர்களுக்கும் பாகுபாடு காட்டப்படுகின்றதே! நீங்கள் மறந்து விட்டீர்களா?

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு, சலாகமசாதியைச்சேர்ந்த திரு. சி. பி. டி. சில்வா அவர்கள்பிரதமராக வருவதையோ அல்லது அக்கட்சிக்குத்தலைமை தாங்குவதையோ உயர்சாதியினர் விரும்ப வில்லையென்பதை நீங்கள் அறியவில்லையா?

சிங்கள பௌத்தரும் சிறுபான்மைச் சாதியைச் சேர்ந்தவருமான திரு. அசோகா கருணாரட்ண, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வர முடியுமா? அல்லது தமிழ் பௌத்தரெனக் கூப்பாடுபோடும் வயிரமுத்துவும் டேவிட்டும் அரசாங்கசேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவோ அல்லது மல்வத்தை உயர்பீடக்குருவாக வரமுடியுமா?

உங்கள் போதனைக்கு முன்மாதிரியாக உங்கள் திருச்சபையையும் கலைத்து கிறீஸ்தவ ஆலயங்களைப் பௌத்த ஆலயங்களாக அமைத்து கிறிஸ்தவர்களைப் பௌத்தர்களாக மாறும்படி செய்வீர்களா?

—'குத்திட்டி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## ‘பெரியதடி’ கொண்டு விரட்டுவோம்!

கிணறு வெட்டப் போய்ப் பூதம் புறப்பட்ட கதை போல வட இலங்கையிலுள்ள மூன்று அரசினர் பாடசாலைகள் மீது எழுந்த நெருக்கடி, இந்நாட்டுத்தமிழ் மக்களின் சிறிதும் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படை உரிமையொன்றுக்கு சவால் விடும் ஒரு பிரச்சினையாக இன்று மாறியுள்ளது. ஆம், இந்நாட்டுத் தமிழ்க் குழந்தைகளின் போதனு மொழி தாய் மொழியாகிய தமிழே என்ற மூலாதாரக் கொள்கையிலிருந்து வழுவிச் சென்று, போதனுமொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை பெற்றேரின் விருப்பத்துக்கு விடுவதற்கு கல்வியமைச்சு இப்பொது சூழ்ச்சி செய்து வருகிறது;

பிரச்சினைக்குரிய இம்மூன்று பாடசாலைகளையும் சிங்களத்தைப் போதனு மொழியாகக் கொண்ட சிங்கள பௌத்த கனிஷ்டவித்தியாலயங்களாக மாற்றி, அவற்றைப் பொறுப்பேற்கும் படியும், அப்பாடசாலைகளுக்கு தென்னிலங்கையிலிருந்து சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படியும் கல்வியமைச்சு முதலில் உத்தரவிட்டது;

இந்த ஏதேச்சாதிகாரச் சட்டத்தை— தமிழ்க் குழந்தைகளை சிங்களவர்களாக்கும் இனக்கொலைத் திட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சி குரல் எழுப்பியது. தமிழரசுக்கட்சியின் பின்னல், வடபகுதியிலுள்ள பெற்றூர் சங்கத்தினரும், கல்விமான்களும் சட்ட அறிஞர்களும் மற்றும் தமிழ் மக்களும் அணிவகுத்து நின்றனர். கல்வியமைச்சின் உத்தரவு சட்டவிரோதமானதென்றும், தமிழ்ப்பாடசாலைகளை சிங்கள பௌத்த பாடசாலைகளாக உருமாற்றுவதற்கு கல்வியமைச்சருக்கு அதிகாரமில்லையென்றும் தமிழரசுக்கட்சி பிரதமரிடம் சுட்டிக்காட்டியது. இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்பதானல் தமிழ்ப்பாடசாலைகளாகவே இப்போதுள்ள ஆசிரியர்களுடன் பொறுப்பேற்கப்படவேண்டுமென்று தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது.

தமிழரசுக்கட்சியும் தமிழ் மக்களும் காட்டிய மூர்த்தண்ணியமான எதிர்ப்பு கல்வியமைச்சரைக் கதிகலங்க அடித்துவிட்டது. இதன் காரணமாக, அரசினர் பாடசாலைகளாகவே குறித்த பாடசாலைகள் பொறுப்பேற்கப்படுமென்றும் தற்பொழுதுள்ள போதனுமொழியே தொடர்ந்தும் போதனுமொழியாக இருக்கும் என்றும் தெரிவித்து கல்வியமைச்சிலிருந்து புதிய உத்தரவு பிறந்தது.

புதிய உத்தரவின் பிற்பகுதியிற்தான் விஷம் கலக்கப்பட்டுள்ளது. பெற்றூர் கேட்டுக்கொண்டால் இப்போதுள்ள சட்டத்துக்கு அமைய போதனுமொழியில் மாற்றம் செய்யப்படும் என்று கூறுகிறது சுற்றறிக்கை. இதன்பொருள், நேரடியாக சிங்களத்தை தமிழ்க் குழந்தைகளின் தொண்டைக்குள் திணிப்பதற்கு எதிர்ப்பு இருப்பதால், கொல்லைப்புற வழியாக அது திணிக்கப்படவிருக்கிறது என்பதுதான்;

குறித்த மூன்று பாடசாலைகளில் கல்விபயிலும் தமிழ்ப பிள்ளைகளிடம் சிங்கள பௌத்தத்தை திணிக்கும் தமது இனக்கொலைத் திட்டத்தை கல்வியமைச்சர் உளமாரக் கைவிட வில்லையென்பதையும், முறையைத்தான் மாற்றியிருக்கிறர் என்பதையுமே புதிய உத்தரவு எடுத்துக்காட்டுகிறது.

புதிய உத்தரவு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் இதை ஊர்ஜிதப்படுத்துகின்றன. இப்பாடசாலைகளுக்கு விஜயம் செய்த கல்வி மாஅதிகாரியும் மற்றும் கலவிஅதிகாரிகளும், கல்வி அமைச்சரின் எடுபிடிகளும் கைக்கூலிகளும், சிங்களத்தைப் போதனுமொழியாகஏற்றுக் கொள்ளும்படி பெற்றேர்களிடம் கெஞ்சியும், சலுகை தருவதாக ஆசைமொழி பேசியும், அதிகாரத்தைக் காட்டிப் பயமுறுத்தியும் வருவதாகவும், இச்சட்ட விரோதச் செயலைத் தடுத்து நிறுத்தித் தமிழ்ப் பிள்ளைகளின் போதனு மொழி தமிழே என்பதை நிலை நாட்டுமாறும் தமிழரசு பா. உ.க்கள் நால்வர் பிரதமரைக் கோரியுள்ளனர்.

ஒரு தமிழ் அல்லது சிங்களப் பிள்ளைக்கு அதனதன தாய் மொழியிலேயே போதனை ஊட்டப்படவேண்டும். பிள்ளையின் போதனு மொழி எது என்பதைத் தெரிவு செய்வதற்குப் பெற்றேருக்கு அதிகாரமில்லை. இதை நீதிமன்றமே ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழ்க் குழந்தைகளின் போதனு மொழியைத் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றேரின் விருப்பத்துக்கு விடும் கல்வியமைச்சின் போக்கு நீதிமன்றத் தீர்ப்பையே அலட்சியப்படுத்துவதாகும்; சர்வதேசக் கல்விச் சட்டத்தையே மீறுவதாகும்.

சிங்களமே போதனு மொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்குச் சார்பாகப் பெற்றேரைக் கல்வியமைச்சு அதிகாரிகள் அதிகாரத்தைக் காட்டிப் பயமுறுத்தியும் ஆசைமொழி காட்டியும் சம்மதிக்க வைக்க முயல்வது உண்மையானல், அவ்வதிகாரிகள் மீது உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியது நேர்மையான ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். ஆனல் இங்கு அரசாங்கமே பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும்போது நேர்மையை எங்கே எதிர் பார்க்க முடியும்? நீதியை எப்படி நிலைநாட்ட முடியும்?

ஆகவே கல்வியமைச்சின் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிக்க ஒரே வழிதான் உண்டு. குறித்த பாடசாலைகளின் பெற்றேர்களையும் ஆசிரியர்களையும் தமிழ் அறிஞர்களும், கல்விமான்களும், தமிழ் அரசியற் கட்சிகளின் தலைவர்களும் தொண்டர்களும் சந்தித்துச் சிங்கள பௌத்தத்தை ஏற்பதால் தமிழினத்துக்கு ஏற்படும் பெருந் தீமைகளை எடுத்து விளக்கிட வேண்டும்.

சிங்களத்தை ஒரு சில பெற்றேர் ஏற்றுக் கொண்டிருக்கலாம். அதற்குக் காரணம் முழுக்க முழுக்க அறியாமையே. சிங்களத்தை ஏற்பதால் வரும் பாரதூரமான விளைவுகளைத் தெரிந்து கொள்ளாமல் ஆசை வார்த்தைகளை நம்பி இந்த முடிவுக்கு அவர்கள் வந்திருக்கலாம். எனவே உண்மை நிலையை உள்ளத்தில் படும்படி எடுத்துக் கூறினல் அவர்கள் தமது தவறன முடிவைத் திருத்திக் கொள்வார்கள் என்பது சர்வ நிச்சயம்.

இதே வேளையில் தமிழ்ப் பிள்ளைகளின் போதனு மொழி தமிழாகவே இருக்க வேண்டும் என்ற தமிழ் இனத்தின் ஏகோபித்த கோரிக்கையை அன்று ஏற்றுக் கொண்ட ஆட்சியாளர்கள், இன்று அதிலிருந்து பிறழ்ந்து செல்வதைத் தடுத்து நிறுத்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டுமென்று வற்புறுத்துகிறேம். இந்த அடிப்படைத் தத்துவத்தை நிலைநாட்டத் தவறி விடுவோமானல், தமிழினம் இந்நாட்டில் காலப்போக்கில் அழிந்து போவதையாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

தமிழ் பாடசாலைகளில் போதனு மொழியாகவோ இரண்டாவது மொழியென்ற நிலையிலோ வேறு எந்த உருவத்திலோ சிங்களம் திணிக்கப்படுவதை தன் பலங்கொண்ட மட்டும் எதிர்த்துப் போராடித் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழினத்தின் முழுமுதற் கடமையாகும். சிங்களத்தை இஷ்டபாடமாக நுழைய அனுமதித்தால் கூட, அது நாளை போதனு மொழியாக மாறறப்படக்கூடிய அபாயம் இருந்துவருகிறது. ஆகவே சிங்களம் என்ற விஷப்பாம்பு தமிழ் பாடசாலைகளில் நுழைய முடியாதபடி ‘பெரியதடி’ கொண்டு அடித் [illegible] மறத்தமிழ் மக்க [illegible] சுட்டிக் காட்டவிரும்புகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பக்கம் வந்திடும் சிங்களம்?

# அது எத்தனைபட்டாளம் கூட்டி வரும்?

## அரசியல் மடல்

அன்புள்ள தோழா,

கல்வியமைச்சரின் இன வெறிப் போக்கால்—திமிர் நிறைந்த பிடிவாதத்தால்— ஜூன் முதலாம் திகதி நம் இயக்கத்தைச் சேர்ந்த எத்தனையாயிரம் இளைஞர்கள் களப்பலியாவார்களோ— எத்தனைபேரைசிங்களஏகாதிபத்தியத்தின் படைபட்டாளம் அடித்து நொருக்குமோ—திருமலை நடராசன், மட்டுநகர் இராசேந்திரன் போன்ற அஞ்சா நெஞ்சம் படைத்த தியாகிகளின் வழியை பின்பற்றி எத்தனை பேர் தம் உயிரைக் காணிக்கையாக்கவேண்டி வருமோ- பிணமலை குவியுமோ இரத்த ஆறு ஓடுமோ-என்றெல்லாம் நான் எண்ணி எண்ணி அச்சப்பட்டதுண்டு. அதேநேரத்தில் இப் போராட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களிடையே மோதலை ஏற்படுத்தி—உயர்ந்தவர்கள் என்று கூறப்படுவோருக்கும் தாழ்ந்தவர்கள் என்று கூறப்படுவோருக்குமிடையே நிரந்தரப் பகையை வளர்த்து விடவும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகள் சதித்திட்டம் தீட்டியிருந்ததையும் நான் அறிவேன்.

ஆமாம் நண்பா, ஆங்கல ஏகாதிபத்தியத்தின் இலட்சியம் பிரித்து ஆள்வதுடன்மட்டும் இருந்தது. சிங்கள ஏகாதிபத்தின் இலட்சியம் தமிழ் பேசும் மக்களைப் பிரித்து ஆள்வதல்ல, பிரித்து அழிப்பது.

ஏன் நண்பா, போராட்டம் என்றல் உனக்கு ஏன் அச்சம் ஏற்படுகின்றது என்று கேட்பாய். போராட்டத்துக்கல்ல, அதன் விளைவுகளை எண்ணும்போது எவரும் சிறிது அச்சப்படாமலிருக்க முடியாது.

இந்த அச்சம் கோழைத் தனத்தால் எழுந்ததலல- பொறுப்புணர்ச்சி படைத்தவர்கள் யாருக்கும் இந்த அச்சம் எழவே செய்யும். அதற்காகப போராடாமல் இருக்க வேண்டுமென்பது எனது கருத்துமல்ல. போராடியே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்படும் போது களத்திலிறங்கியே தீர வேண்டும்.

போராட்டத்தால் ஏற்படும் ‘விளைவுகள்’ என்று குறிப்பிட்டிருந்தேன்-எதைத் தெரியுமா? தமிழுரிமைப் போராட்டத்திலே தன் உடல், பொருள், ஆவி. மூன்றையும்அர்ப்பணித்தார்அண்ணல் வன்னிய சிங்கம். அதன் விளைவாக அவரது மனைவி கோமதி மஞ்சள் குங்குமம் இழந்து 10 ஆண்டுகளாகின்றன. அந்த மாதரசியின் கண்ணீரை நம்மால் துடைத்து விட முடியுமா?

குடும்பத்துக்கென ஐந்து சலலிக் காசுகூட சோத்து வைக்காது முழு நேரமும் பொதுப் பணியிலீடு பட்டு தன்னையே தமிழினத்துக்கு ஒப்படைத்த அமரரின் குடும்பத்துக்கு நிதி உதவியாகுதல் செயதோமா?

இதே போல, பூவிழந்து பொட்டிழந்து தவிக்கும் திருமதி வி. ஏ. கந்தையா, திருமதி இராசவரோதயம், திருமதி ஏகாம்பரம்; தியாகி நடராசன், இராசேந்திரன். இன்னும் இதுபோன்ற தியாகிகளன் குடும்பங்களுக்கு தமிழினம் என்ன கைமமாறு செயது விட்டது?

நண்பா, மொழிக்காக, நாட்டுக்காக, இனவிடுதலைக்காக தம் உயிரையும் திரணமாக மதித்து போராடும் தியாகிகளின் குடும்பங்களை தமிழினம் எப்பொழுது மதித்து காப்பாற்ற முன்வருகிறதோ அப்பொழுதே என் போன்றவர்களின் ‘அச்சம்’ அகல முடியும்.

விடுதலைக்குப் போராடும் தியாகிகளைப் போற்றுத இனத்தில் தியாகிகளின குடும்பங்களுக்கு உதவியளிக்காத இனத்தில்—புதிய தியாகிகள் தோன்றவே முடியாது. தியாகிகளை—அவர்களது குடும்பங்களை—போற்றுத இனம் சுதந்திரத்தின் நிழலிலே கூட நிற்க அருகதையற்றது நண்பா;

ஆனல் நண்பா, கல்வியமைச்சர் தமிழினத்தை கொலை செய்வதற்கென வகுத்த திட்டம்—என்ன நேர்ந்தாலும், இன்னுயிரைப் பலிகொடுத்தென்றலும் தடுத்து நிறுத்தப்படவேண்டியது. எனவே தான் தமிழ் பேசும் மக்களை சிங்களவர்களாக இனமாற்றம் செய்யும் இரியகொல்லையின் உத்தரவுக்கு எதிராக முதல் முழக்கம செய்தது நமது தமிழரசுக்கட்சி.

எதிர்ப்புக் குரலுக்கு இரிய கொல்லை செவிசாய்க்காவிட்டால் களத்திலிறங்குவதைத் தவிர தமிழரசுக்கு வேறு வழியிருக்கவில்லை.

நண்பா, தமிழரசுக்கட்சி போராட்டம் என்று அறிவித்ததும் உடனடியாக இது ஒரு தேர்தல் ஸ்டண்ட் என்று நமது எதிரிகள் கூறத்தயங்கவில்லை! கவனித்திருப்பாய். இதே போல தமிழரசார் போராட்டத்தால் தென்னிலங்கைத்தமிழருக்கு ஆபத்து ஏற்படும் என்று ‘தேசியம்’ பேசும் பத்திரிகைகள் எச்சரிக்கைவிடவும்தொடங்கின.

ஆனல், தமிழினத்தை சிங்களவராக்கும் இரிய கொல்லையின் இனக்கொலை திட்டத்தை எந்த ஒரு ‘தேசியத்’ தினசரியாவது சிங்களக் கட்சியாவது கண்டிக்கவில்லை, மாறக தட்டிக்கொடுத்தன, அவதானித்திருப்பாய்.

முதலாளித்துவம் பேசும் யூ. என். பி. வகுத்த இன ஒழிப்புத் திட்டத்தை சோசலிசம் பேசும் கூட்டுக்கட்சிகளும், மாவோ‘இசம்’ பேசும் பீக்கிங்கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரித்து நின்றன. தமிழ் பேசும் இனத்தை ஒழித்துக் கட்டுவதில் எல்லாச் சிங்களக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயல் புரிகின்றன என்பதை பௌத்த பாடசாலைப்பிரச்சினையும் தெளிவாகஉணர்த்திவிட்டது.

நண்பா, ஏனைய இனங்கள் தமது மொழியில் வைத்துள்ள பற்றும் தமிழினமக்கள் தமது மொழி மீது கொண்டுள்ள பற்றும் அடிப்படையிலேயே வேறுபட்டது.

மற்றைய இனங்கள் தமது மொழியை ஒருவரொடொருவர் பேசுவதற்கு பயன்படும் சாதனம் என்று மட்டுமே கருதுகிறர்கள். ஆனல் தமிழனே தனது தாய் மொழியாம் தமிழை தன் உயிராக, வாழ்வாக, உணர்வாக, வழிகாட்டியாக, பண்பாடாக, எல்லாமாகக் கருதுகிறன். தமிழ் தமிழ

(9ம் பக்கம் பார்க்க)

# பொன்னம்பலத்தின் பொய்ப் பிரச்சாரங்கள்!

**எஸ்ஸாரெம்'**

பொய், பித்தலாட்டம், உருட்டல் புரட்டல், நெருக்கடி யேற்படும்போது பிரச்சினையிலிருந்து மெதுவாக நழுவி விடுதல், மற்றொருவர் முயற்சியால் ஒரு பிரச்சினையில் வெற்றிகிட்டும்போது அதில் தலையிட்டு எனக்கும் பங்குண்டு என்று ஊருலகத்துக்கு காட்டுதல்—இவை போன்ற நேர்மையற்ற நெறியே திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் என்பதை இந்நாட்டு தமிழ் மக்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்,

அரசியலில் எவ்வளவு பச்சைப் பொய்களையும் கூசாது சொல்லுபவர் பொன்னம்பலம். முன்னுக்கு பின் முரண்படுவார்; இன்றொன்று நாளையொன்று கூறுவார்; ஒருகருத்தைக் கூறிவிட்டு பின்னர் திடீரென்று குத்துக்கரணமடித்து நான் அப்படிச்சொல்லவில்லையே என்று தயங்காது மறுப்பார். அரசியல் ஒழுக்கத்தை எவ்வளவு துடைத்து வழித்தாலும் பொன்னம்பலத்திடம் ஒரு துளியும் காண முடியாது.

### நழுவ முயல்கிறார்

கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட அவரது அரசியல் வாழ்க்கையில் எந்தஒரு கருத்தையும் அவர் நிலையாகக் கொண்டிருந்ததில்லை. குத்துக்கரணங்களும் அடித்த பல்டிகளும், கோமாளிக் கூத்துக்களும் தமிழினத் துரோகமுமே, பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்வை அரித்து சலித்துப்பார்த்தால கிடைக்கும்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில நடைபெற்ற சுவிகரிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களல்லாத ஊழியா சங்க கூட்டத்தில பேசிய திரு. பொன்னம்பலம் வாய்நிறைய பல பச்சைப் பொய்களை உதிர்த்துவிட்டிருக்கிறார். அவரது பேச்சிலே அவருக்கே உரிய 'நான்' என்ற அகம்பாவமும் ஆணவமும் தொனிக்கின்றன.

"1956ம் ஆண்டுக்குப்பின் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களை சிங்களம் படிக்க வேண்டாமென நான் ஒருபோதும் தடுக்கவில்லை. சிங்களம் படிக்காவிட்டால் என்ன நிலையென்று எனக்குத்தெரியும். சிங்களம் படிக்க வேண்டாமென்று ஒரு கட்சி கூறியது. அதைக்கேட்ட படியினால்தான் ஆயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்கள் இன்று வேலை இழக்கும் நிலையிலிருக்கிறார்கள்."

இப்படி தமிழரசுக் கட்சி மீது பாரத்தை போட்டு விட்டு தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையிலிருந்து மெதுவாக தம்மை கழற்றிக் கொள்ள முயன்றிருக்கிறார் திரு. பொன்னம்பலம். நெருக்கடி ஏற்படும் சமயத்தில் பிரச்சினையிலிருந்து நழுவப்பார்ப்பதுதான் பொன்னம்பலத்தின் அரசியல். அவரது இந்த அரசியல் போக்கு ஒன்றுபட்ட தமிழினத்தின் தலைவனாக இருப்பதற்கு அவர் தகுதியற்றவர் என்பதை துலாம்பரமாக காட்டுகிறது.

### கடைந்தெடுத்த பொய்

சிங்களம் படிக்க வேண்டாமெனத் தமிழ் அரசாங்க ஊழியர்களைத் தாம் கேட்டுக் கொள்ளவில்லையென திரு. பொன்னம்பலம் கூறியிருப்பது கடைந்தெடுத்த பொய்யாகும். தமிழரசுக் கட்சியுடன் திரு. பொன்னம்பலமும், திரு. சி. சுந்தரலிங்கமும் சேர்ந்து தான் தமிழ்அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் படிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்கள் விடுத்த அறிக்கை இந்நாட்டின் எல்லாத் தினசரிகளிலும் 1956ம் ஆண்டு ஆகஸ்ட் முதலாந் திகதி வெளிவந்திருக்கிறது.

இன்று புதிய தமிழ் ஊழியர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டதும், பிரச்சினையிலிருந்து நழுவப் பார்ப்பதுடன், தமிழரசுக்கட்சி மீது பழியைப் போட்டுத் தமக்கு ஆதரவு தேடவும் முயற்சிக்கிறார் பொன்னம்பலம். இது கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதமாகும்.

### உண்மை

உண்மையென்னவென்றால், தமிழ் அரசாங்க ஊழியர்களைச் சிங்களம் படிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்ததுடன் பொன்னம்பலத்தின் வேலை முடிந்து விட்டது. சிங்களச் சட்டத்துக்கு எதிரான அவரது கிளர்ச்சி முடிந்து விட்டது.

ஆனால் தமிழரசுக்கட்சியோ, 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி காலிமுகத் திடலில் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக தொடங்கிய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது.

தனிச் சிங்களத்தை தமிழ் பேசும் மக்கள் மீதும் தமிழ்ப் பிரதேசங்களிலும் திணிக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அன்று நடந்த போராட்டம் தீவிரமடைவதற்காக தமிழ் அரசாங்க ஊழியர்களை சிங்களம் படிக்க மறுக்கும்படி தமிழரசுக்கட்சி கேட்டுக் கொண்டதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்க சிங்கள ஆட்சியாளர்கள சட்டரீதியாக அங்கீகரிக்கும்வரை தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிப்பதை தமிழரசுக்கட்சி எதிர்த்ததும் உண்மை.

### மறுதலிக்கவில்லை

தமிழ் அரசாங்க ஊழியர்களை அன்று சிங்களம் படிக்க மறுக்கும்படி தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டதை தமிழரசுத் தலைவர்கள் எந்தக் கட்டத்திலும் மறுதலிக்கவில்லை. அப்படிக் கேட்டுக் கொண்டது தவறானது என்றும் தமிழரசுக்கட்சி கருதவுமில்லை.

தனது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து தமிழுரிமைப் போருக்கு கைகொடுத்து உதவிய தமிழ் அரசாங்க ஊழியர்களை தமிழரசுக்கட்சி கைவிடவில்லை. 1965 ம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட[வுடன் முதல்] வேலையாக தமிழ் [அரசாங்க] ஊழியர்களின் பிரச்சினைக்கு பரிகாரம் காணவே தமிழரசுக்கட்சி முயன்றது.

### தமிழரசின் சாதனை

தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகத் தான் பழைய ஊழியர்களுக்கு சிங்கள மொழியறிவு தேவையற்றது என்பதை வலியுறுத்தும் 700ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையும், சிங்களமொழிச்சட்டத்தின் கீழ் அரசாங்க சேவையில் சேர்ந்த புதிய ஊழியர்களுகு மூன்றாண்டு காலக்கெடு நீடிப்பும் மற்றும் பல சலுகைகளையும் கொண்ட 701வது சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டன. புதிய ஊழியர்களில் எழுதுவினைஞர்களல்லாத பல துறைஅரசாங்க ஊழியர்களுக்கு சிங்களமொழியறிவு தேவையற்றது என்பதையும் 701ம் சுற்றறிக்கை மூலம் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ள வைத்தது தமிழரசுக்கட்சியேயன்றி வேறுயாருமல்ல.

### அரசியல் சின்னத்தனம்

1965ம் ஆண்டு தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் எந்தவித நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தையுமின்றி—தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற அக்கறையின்றி - டட்லியின்கால் பிடிப்போம் என்று யாழ்ப்பாணத்தில் நின்று அறிவித்த பொன்னம்பலம், தன்னால் தான் பழைய ஊழியர்களுக்கு சிங்கள நிபந்தனையிலிருந்து விடுதலை கிடைத்தது என்று கூறியிருப்பது அயலான் பெருமையில் பங்கு கேட்கும் அரசியல் சின்னத்தனமின்றி வேறில்லை.

தேசிய அரசாங்கத்தின் மூலம் தமிழ் அரசாங்கஊழியர்களுக்கு கிடைத்துள்ள அத்தனை சலுகைகளையும் பெற்றுத்தந்தது தமிழரசுக்கட்சியே என்பதை நன்றி மறந்தவனைத்தவிர வேறு எந்தத் தமிழ் அரசாங்க ஊழியனும் மறுக்க மாட்டான்.

### அன்றே ஏற்றிருந்தால்....

திரு. பொன்னம்பலம் இன்று கூறுவதைப் போல 1956ம் ஆண்டு சிங்களம்மட்டும் சட்டம் நிறைவேற்றப் பட்டவுடனேயே எவ்வித எதிர்ப்புமின்றி தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சிங்களத்தைப் படித்திருந்தால் அதன் பலாபலன் என்ன?

(1) வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் தனிச் சிங்களம் திணிக்கப்பட்டிருக்கும்.

(2) தமிழுக்கு பெயரளவிலாவதுசட்டரீதியாகவடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழி என்ற அந்தஸ்து கூட கிடைத்திராது.

(3) பழைய ஊழியர் புதிய ஊழியர் என்றவேறுபாடின்றி அனைவரும் சிங்களம் படித்திருக்க வேண்டியிருக்கும்.

(4) புதிய ஊழியர்களிலும் இன்று சிங்கள நிபந்தனை நீக்கப் பட்டிருக்கும் தமிழ் ஆசிரியர்கள் தமிழ் தட்டெழுத்தாளர்கள் போன்ற சில துறையினர் கூட சிங்களம் படிக்க வேண்டியிருந்திருக்கும்.

(5) புதிய ஊழியர்கள், பதவி உயர்வுப் பரீட்சைகள் திணைக்களப் பரீட்சைகள், தட்டெழுத்துப் பரீட்சை போன்ற யாவற்றையும் சிங்களத்திலேயே எழுதவேண்டியிருந்திருக்கும்.

### நெருக்கடிக்கு காரணம்

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு காரணம் 700ம் 701ம்திறைசேரிச் சுற்றறிக்கைகள் நிர்வாக ரீதியில் புறக்கணிக்கப்படுவதும், அச்சுற்றறிக்கைகள் நீதியான முறையில் அமுல் நடத்தப் படாததுமேயாகும்.

திரு. பொன்னம்பலமும் அவரது தமிழ் காங்கிரசும் இன்னும் விடாமல் தொங்கிக் கொண்டிருக்கும் டட்லி ஆட்சியே சுற்றறிக்கைகளை மீறி தமிழ் அரசாங்க ஊழி



நான் இருக்கக் கூடியதாக கட்சிக்குள் நேற்று முளைத்த சிவசிதம்பரம் உபசபாநாயகராகி விட்டாரே என்று பொன்னம்பலத்தின் உள்ளம் கொதிப்படையலாம். இருந்த போதிலும் பகிரங்க கூட்டத்தில் வைத்து தனது கட்சிக்காரரான சிவசிதம்பரத்தின் மீது பொன்னம்பலம் இப்படியொரு தாக்குதலை நடத்தியது அரசியல் பண்புள்ளதாக தெரியவில்லை. பொன்னம்பலத்திடம் அரசியல்பண்பு தான் ஏது?

## அயலான் பெருமையில் பங்கு தேட்பது அரசியல் சின்னத்தனம்!

யர்களைக் கொடுமையாகப் பழிவாங்குகிறது. இந்த அநியாயத்தை எதிர்த்துத்தான் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டது. ஆனால் தமிழ்காங்கிரஸ் கட்சியோ டட்லியின் காலைக் கழுவி அந்த நீரைப் பருகி இன்னும் இன்பம் காணுகிறது. அதே நேரத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்காகவும் பொன்னம்பலம் கண்ணீர் வடிப்பது வேடிக்கையானது:

"பழைய ஊழியர்களுக்கு சிங்களம் தேவையில்லையென்று திரு. பண்டாரநாயகா கூறியிருந்தார். ஆனால்

1960 ம் ஆண்டு திரு சிவசிதம்பரம் தமிழ் காங்கிரசில் அங்கம் வகிக்கவில்லையா? அங்கம் வகித்திருந்தால் அவர் மூலமாக சிறிமாவிடம் கேட்டிருக்கலாமே? ஏன் செய்யவில்லை? திரு. பொ.வும் சிவசிதம்பரமும் அப்பொழுது ஒருவரோடொருவர் பேசுவது கிடையாதா? அவ்வளவு இருவருக்கும் கசப்பா?

தமிழ் பேசும் மக்களைக் கொடுமைப் படுத்தி-பழைய தமிழ் அரசாங்க ஊழியர்களைக் கட்டாய ஓய்வில் அனுப்ப முயற்சித்த சிறிமா அரசாங்கம், காலஞ் சென்ற

## தமிழுரிமையை நிலைநாட்ட தமிழ் காங்கிரஸ் என்ன செய்தது?

60 ம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு சென்ற தமிழ் பா. உ. க்கள், கணவர் கொடுத்த வாக்கை நிறைவேற்றும்படி திருமதி சிறிமாவிடம் கோரவில்லை'' என்று ஒப்பாரி வைத்திருக்கிறார் பொன்னம்பலம். இதன் மூலம் மறைமுகமாக 1960 ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்றத்துக்கு சென்ற திரு. மு. சிவசிதம்பரத்தையே தாக்கியிருக்கிறார்.

திரு. பொன்னம்பலத்துக்கு தமது கட்சியைசேர்ந்த அரைச்சபாநாயகர் திரு. சிவசிதம்பரம் மீது ஆயிரம் கோபங்கள் இருக்கலாம்.

பண்டாரநாயகாவின் பெயரைக் கேட்டவுடன் அவரது வாக்குறுதியை நிறைவேற்றி தமிழ் அரசாங்க ஊழியருக்கு நன்மை செய்திருக்கும் என்று பொ. கருதினால் அவரைவிட சிறந்த அரசியல் முட்டாள் வேறுயாருமிருக்க முடியாது.

சிங்களவருக்கு எப்படி சிங்களமோ, அதுபோல தமிழருக்கு தமிழ் இருக்க வேண்டும் என்கிறார் பொன்னம்பலம். இதையாரும் ஆட்சேபிக்கவில்லை. 1956 ம் ஆண்டு தனிச் சிங்களச்சட்டம் வந்த பின்னர் இந்த உரிமையை

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களுக்கு வள்ளுவர் காட்டும் வழி

இன்று இலங்கையில் உரிமைகளை இழந்து வாழும் தமிழ் மக்களின் அரசியல் அரங்கில் இருவகையான கொள்கைகள் உள. ஒன்று உரிமையைப் பறித்த சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைத்து சலுகைகளைப் பெறுவது. மற்றையது அவர்களுடன் போராடியேனும் உரிமைகளைப் பெற முயல்வது.

ஒத்துழைத்துச் சலுகை பெறும் வழி தமிழ் காங்கிரசுக்காரர்வகுத்துக்கொண்ட வழி. போராடியேனும் உரிமை பெறல் தமிழரசுக் கட்சி தழுவிய வழி.



சலுகை பெறுவது இலகுவான வழி; நோகாமற் கேட்டுக் கேட்டு, பிறருக்குத் தெரியாமல் இரந்து இரந்து பெற முயலும் வழி, இரண்டொருசலுகை கிடைத்து விட்டால் 'வெற்றிவெற்றி' என்று பறையறைந்து மக்களை மயக்கவும் வாய்ப்புண்டு. தன் மானத்தை இழந்தவர் - ஏமாற்று வித்தை கை வந்தவர் - தம் சுகபோக வாழ்வுக்கு நாடும் வழி இந்தப் போலி வழி.

**கா.பொ. இரத்தினம்**

மருட்டும் இந்த வழியிற் செல்பவர்கள் போராடி உரிமை பெறும் வழிக்கு வருதல் இலகுவானதன்று. இவர்கள் காலப் போக்கில் போராடுவதற்கே இடமில்லாமல் தமிழ் இனத்தவரை மீளா அடிமைகளாக்கி விடுவார்கள். இவர்கள் பெறும் சலுகைகளும் நிலைத்துப் பயனைக் கொடுக்கமாட்டா- வடக்கிலோ கிழக்கிலோ ஒரு தொழிற்சாலையைப் பெறலாம். ஆனல் அத் தொழிற்சாலையை நடத்தும் அதிகாரம் ஆளும் இனத்திடமே இருக்கும். தலைவரும், ஆட்சிச் சபையினரும் ஆளும் இனத்தவர்களாக அன்றேல் ஆளுவோரின் கைப்பொம்மைகளாகவே இருப்பார்கள். தொழிற்சாலையில் 'கூலி வேலைதான்' ஆளப்படுவோருக்குக் கிடைக்கலாம்.

போராடி உரிமை பெற முயலும் வழி துன்பமும் துயரும் நிறைந்தவழி. போராடிப் போராடி எண்ணியதை பெறமுடியாமல் தொடர்ந்து முயல வேண்டியவழி. உறுதி குலைந்தால், உழைப்புத் தளர்ந்தால் தொடர்ந்து செல்லமுடியாதவழி. இவ்வழியிற் செல்வோருக்குத் தளர்ச்சி உண்டாகும்பொழுது சலுகை வழி ஆசை காட்டி மயக்க முயலும்; மயக்கில் எடுபட்டால், மெல்ல மெல்ல அழிவுப்பாதைக்குள் செலுத்திவிடும். மயக்கத்திற் சிக்கினவர்கள், தாம் சிக்கவில்லை என்றே கருதிக்கொண்டு மீளமுடியாத அளவுக்கு அழிப்பாதையிற் சென்று விடுதலும் உண்டு. இவ்வாறு செல்வோர் உரிமைப் போராட்டத்தை நெகிழவிட்டு அரைகுறைச் சலுகைகளைப் பெரிதாக்கிக் காட்ட முயல்வார்கள்.

அற்ப சலுகைகள் வெற்றி எனும் போர்வை கொண்டு மயக்குவதாலும், உரிமைப் போராட்டம் தோல்விகளுக்கு ஊடாகவே வெற்றிக்குச் செல்ல வேண்டியிருப்பதாலும் சில வேளைகளில் உரிமைப் போராட்டத்தில் தளர்ச்சியும், சலுகைவழியில் நாட்டமும் மக்களுக்கு உண்டாகலாம். இந்த நெருக்கடியான நிலையில்—எது வேண்டும் சொல் மனமே— எனும் சந்தேக நிலைமை உண்டாகும் பொழுது வள்ளுவர் வழிகாட்டுகின்றார்.

அம்பு கூடாது; வேல நல்லது என்கிறார். அற்பவெற்றி வேண்டாம்; நல்இலக்குத் தவறிய தோல்வி நல்லது என்கிறார். சலுகைகள் வேண்டாம்; உரிமைப் போராட்டத் தோல்வியை வரவேற்குமாறு அறிவுரை பகர்கின்றார். சலுகை வேட்டை, முயல் வேட்டை போன்றது. உரிமை வேட்டை, யானை வேட்டை போன்றது. காட்டிலே ஓடுகின்ற முயலை எய்த அம்பிலும், வெளியிடத்தில் தோன்றிய யானைக்குஎறிந்து குறிதவறிய வேலை ஏ... இனியது என்கிறார்.

பயந்து ஓடும் முயலைக் கொல்வதிலும், எதிர்த்து வந்த யானையை விழுத்த முயல்வதுதான் பெருவெற்றி. முயலைப் பதுங்கி நின்று எய்வதிலும், யானையை நேருக்கு நேர எதிர்த்து வேல் எறிந்து தாக்குவதுதான் உண்மையான வீரம்.

அற்ப வெற்றியைத் தரும் சலுகைகளிலும் வீரத்திருநிறைந்த தோல்வியை ...ம் உரிமைப் போராட்டமே சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

''கானமுயல் எய்த
அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல்
இனிது''
தமிழ்மறை 733

திருவள்ளுவர்
2000 ஆண்டு விழா சிறப்...

# வள்ளுவரும் வள்ளலாரும்

வள்ளுவர் வள்ளலார்! இந்த இரண்டுபெயர்களும் புது உலகம் படைக்க விரும்புவோருக்குப் புனிதமானவையாகும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றி சாதிகளற்ற - சமயங்களற்ற - வருணப் பாகுபாடுகளற்ற - ஏழை பணக்காரன் என்ற வர்க்க வேற்றுமையற்ற ஒரு புதிய சமுதாயத்தைத் தமது நீதி நூலிலே படைத்துக் காட்டினர் வள்ளுவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய வள்ளலார், வள்ளுவர் தமது நீதி நூலில் காட்டிய புது உலகத்தைத் தம் கண்ணெதிரே காணப் பாடுபட்டார்.

வள்ளுவர் நீதிகளைப் பாடினர்; வள்ளலார் அநீதிகளைச் சாடினர்.

''வாழையடிவாழையென வந்த திருக்கூட்டத்தில் நான் ஒருவன்'' என்றார் வள்ளலார். ஆம்; தன்னை வள்ளுவரின் வழித் தோன்றலாக, அவர் தம் கொள்கைகளின் வாரிசாக அறிமுகப் படுத்திக் கொண்டவர் வள்ளலார்.

இந்த இருவருமே தமிழர்; தமிழ் மொழியில் புலமை பெற்றோர், இவர்களுடைய இலட்சியக் களம் உலகம் முழுமையுமானாலும் இவர்கள் ஓடியாடி உலவிய நிலம் தமிழ் நாடேயாகும். அவர்கள் பாடியது தமிழ் மொழியிலே. அவர்கள் வாழ்ந்தது 'தமிழர் வழி'யிலே.

வள்ளலார் 'மரணமிலாப் பெரு வாழ்வு' வேண்டினர். அதனைப் பெற்றுவிட்டதாகவும் பிரகடனம் செய்தார். 'சாகாக் கல்வி' என ஒன்றிருப்பதாகவும் கூறினர். அந்தச் சாகாக் கல்வியைத் தாம் பெற்றதும் திருவள்ளுவர் படைத்த திருக்குறளிலிருந்துதான் என்கின்றார்.

''தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் முகமாய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.

—திருவருட்பா உபதேசப் பகுதி.

(உரைநடை)

திருக்குறளிலே முதல் அதிகாரம் 'கடவுள் வாழ்த்து' ஆகும். அதில்,

மலர்மிசை ஏகினன்
மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

பொறிவாயில் ஐந்த
வித்தான்
பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்

என்னும் பாக்களிலே வரும் 'நீடு வாழ்வார்' என்னும் சொல்லுக்கு 'இறவாமல் நித்திய தேகத்துடன் என்றென்றும் வாழ்வார்' என்று பொருள் கொள்ளுகிறார் வள்ளலார்.

இது எப்படியாயினும்சரி; மரணத்தை ஒழிக்கும் கல்வியை முதல் முதலில் போதித்தது திருக்குறள் தான் என்னும் உண்மையை வள்ளற் பெருமான் நமக்கு உணர்த்துகின்றார். இது நமக்கு அவர் தரும் புதிய செய்தி.

வள்ளலார் 'நெஞ்சறிவுறுத்தல்' பாடியுள்ளார். 'கலிவெண்பா' வால் எழுநூற்றைந்து பாடல்களைக் கொண்டு அமைந்துள்ள 'நெஞ்சறிவுறுத்தலி'லே பல் வேறிடங்களில் குறட்பாக்களை எடுத்தாண்டுள்ளார். 'நெஞ்சறிவுறுத்தல்' என்பது தனது நெஞ்சுக்குத்தானே அறிவு கூறுவது.

ஏதிலார் குற்றம்போல்
தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும்
உயிர்க்கு


என்பது குறள் வாக்கு.

இதன் பிரதிபலிப்பே 'நெஞ்சறிவுறுத்தல்.' வள்ளலார, பிறர் குற்றங்களையும் கண்டார். அவற்றை எடுத்துக் காட்டி இடித்துரைத்தார். அதுபோல, தன்னிடமுள்ள குற்றங்களையும் பட்டியல் தொகுத்துப் பாடினர். அந்தப் பட்டியல்தான் ''நெஞ்சறிவுறுத்தல்.'

இந்தக் குற்றப் பட்டியலில் உள்ளவை எல்லாம் வள்ளலாருடைய வாழ்க்கையில் கலந்திருந்தனவென்று நம்பி விட வேண்டாம், பிறர் குற்றங்களைத் தம் குற்றங்களாகக் கற்பித்துப்பாடுவர் ஞானியர். மகா ஞானியான வள்ளலார் அந்த மரபையே பின்பற்றி 'நெஞ்சறிவுறுத்தல்' பாடியுள்ளார்.

தன் நெஞ்சைப் பார்த்து, 'நெஞ்சே நீ திருவள்ளுவர் போதித்த திருக்குறள் நெறிப்படி வாழ்வாயாக, என்று கூறுகின்றார். குறள் வழியில் வாழாததற்காகத் தனது நெஞ்சைக் கடிந்து கொள்ளுகின்றார்.

கூத்தாட்டவைசேர்
குழாம் விளிந்தாற் போலு
மென்ற
சீர்த்தாட் குறள்மொழியுந்
தேர்ந்திலையே
செல்லா விடத்துச் சினந்தீது
செல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற
தெண்ணிலையே!
தன்னைத்தான காக்கிற்
சினங்காக்க என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப்
புகழ்ந்திலையே!
அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போல என்னும்
திகழ்வாய் மையு நீ தெளி—
யாய்!



**சிலம்புச்செல்வர்**
**ம. பொ. சி.**

உறங்குவது போலுமென்ற
வொண்குறளின—
வாய்மை
மறங்கருதி யந்தோ—
மறந்தாய்
நெருநல் உளன் ஒருவன்
என்னு நெடுஞ்சொல்
மருவுங் குறட்பா மறந்தாய்!
இரக்கின்றோர்களுக்கு
இலலையென் னார்பால்
இரத்தல் ஈதலா எனல்
உணர்ந்தலையே!

இந்த வெண்பாக்களிலே குறள் நெறிகளை எடுத்துக் காட்டி, அந்த அருள் நெ...ளிலே நில்லாமல, மருள் நெறிக்கு அடிமைப்படும் குற்றத்திற்காகத் தனது நெஞ்சைக் கடிந்து கொள்ளுகின்றார்.

'குறள் மொழியும் தேர்ந்திலையே' என்று கூறி, தன் நெஞ்சுக்கு இரங்குகின்றார்.

'வள்ளுவரின வாக்கைப் பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்தலையே' என்று புகல்கின்றார்.

''திருக்குறளின் வாய்மையை நீ தெரிந்திலையே, தேர்ந்திலையே'' என்று குறைபட்டுக் கொள்கின்றார்.

அறங்கூறும் வள்ளுவனை மறந்தனையே'' என்றும் நொந்து கொள்கின்றார்.

மேலே எடுத்துக்காட்டிய அருட்பாக்களிலே சுட்டிக் காட்டப்படும் குறட்பாக்களை முழுமையாகப்பார்ப் போம்:

கூத்தாட்டு அவைக்குழாத்
தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் காட்டும் போர்க்களமும் காதற்களமும்

சேனை தலையாக்கிச் சங்குருதி நீர் தேக்கி ஆனை திக்கும் அருஞ்சேரும் பார்க்களத்தில் எதிரிக ின் முடி நடுவதற்கு முரசம் ர்த்து விட்டது. அழைப்பு ந்து விட்டது அந்த வீர

படை முழக்கம் பாராய் ண்ணே—தடையின்றி டை தாராய் பெண்ணே— ன வேண்டுகிறான் விழுப்

நவர்
ா சிறப்பிதழ்

ண் படாத நாளெல்லாம் ஞன நாட்கள் எனக் கரு ும வீரமகன். விழிப் பண்பா ம் வடிவழகி முத்து நகை ந்துகின்ற இதழ் குவித்து ததமீந்து, வெற்றியோடு ிரும்பிடுக அத்தான் என்று ணைத்து நின்றாள்—அவனு ந் ரியாமல் கண்ணீரை அவன் தோளில் துடைத்துக் கொண்டு.

வேலெடுத்து வா என் ான்—விழி தருவாள். ரத் தம் படிந்த வாள் எங்கே னக் கேட்பாவ செவ்விதழ் கொடுப்பாள். "அக்கள மில்லை பெண்ணே இக்களம்! இணை பிரியா எந்தன் துணையே! தலைவனவன் தயாராய் நின்றிருப்பான். எனை நோக்கி! வேல் தருவாய்! விடை தருவாய்! இடையில்லாப் பேரழகே" என மடை திறந்த காதல் வெள்ளம் விட்டு மறவனவன் நடக்கலுற்றான் மாவீரர் அணி வகுப்பின் பக்கம்!

வழியில் தாய் கண்டாள், வாழ்த்தினாள். வருக புலியே வெற்றியோடு—என்றாள். "தலைவனவன உன் மீது சிறு கோபம் கொண்ட சேதி நானறிவேன். நீ மறைத்தால் தெரியாமல் போகுமா தம்பி! தாயகத்தின் மேன்மைக்குத் தலை கொடுக்கச் செல்லுகின்ற படை வரிசை காத்திருக்கும்—கடமை செய்து வா என கண்ணே"— என்று முன்பவன் மார்பிலே பெற்றிருந்த புண மீது முத்த மிட்டாள்.

போருக்குச் சென்ற வீரன் எதிரிகளை பொடி செய்து எலும்புப் புழுதியிலே சேர்த்து விட்டான். இரத்தச் சகதியிலே இருதரப்பு வீரர்களும் இறுதியாத்திரைக்குச் சித்தமானார். கடை வெற்றி பகைவருக்கு என்றோர் சேதி பறந்துவர "கண்ணிருந்தும் குருடராநாம்?" எனக் கேட்டபடி களத்தினிலே நம் காளை சுழற்காற்றாய்ப்பறந்து சென்றான், தனியொருவன்—தலைவனவன் கண்ணெதிரே பகைப் படையின் பலமழித்தான். தோல்விப் புகைபடலம் ஒழித்து நின்றான். வெற்றிக்கு விதநிட்டான், வீணர் பிணம் குவித்திட்டான் அம்மவோ; இறுதியிலே மறைந்து வந்த அம்புக்கு இரையானான்.

வெற்றி கண்ட படைத்தலைவன், வீரன் சாய்ந்து விட்ட காட்சிதனைக் கண்டு கதறி விட்டான்.

சிறியோர் செட்டை விளைத்த சிறு கசப்பால கருத்தினிலே வேறுபாடு கொண்டிருந்த காளைதனைக் கண்ணீரால் குளிப்பாட்டுகிறான்.

சாகிறான் வீரன் சொல்வான்: தலைவ! தமைக் காத்த தலைவ—கண்களில் நீர் பெருக் கெடுக்குமாறு ஏற்படுகின்ற இது போன்ற களச் சாவுகளை — வீரர்கள் யாசித்தாவது பெறுதல் வேண்டும்."

தலைவன் தன் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு அவ்வளவு பெருமையாக இருக்கிறது. தலைவனுக்கு கண்ணீரை வரவழைத்த வீரசசாவு பாராட்டுக் குரியது. அதற்கு இதோ குறள்:

"புரந்தார் கண் நீர்மல்கச்
சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது
உடைத்து:"

★

கள்ளுண்ணாமை

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற
ன்னைத்தான் காசகின் சினங்காக்க காவாக்கால்
ன்னையே கொல்லும் சினம்
கழ்வாரைத்தாங்கும்நிலம் போலத் தமமை
கழ்வார்ப் பொறுத்தல்— தலை
றங்குவது போலும் சாக்காடு உறங்கி
ிழிப்பது போலும பிறப்பு
ல் உளனொருவன
ன்றிலனே என்னும்
பருமை உடைத்துவ்வுலகு
ரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
னவிலும் தேற்றாதார்— மாட்டு

வள்ளலார், தாம் பாடிய நெஞ்சறிவுறுத்தலிலே குறட் ாக்களை எடுத்தாண்டுள்ள றமை போற்றத் தக்கதா ம். திருக்குறளிலே அவர் தாய்ந்திருந்தார் போலும்! புலாலுண்பது குற்றமென தன் முதலாகக் கூறியவா ள்ளுவரே யாவார். அதனை ரு மதமாகவே கொண்டு, கால்லாமையை வலியுறுத ஞர் வள்ளலார். அதது றயிலே வள்ளுவரையும் வர் மிஞ்சி விட்டார்.

வள்ளுவர் குறட்பாக்களை ள் ாரின் அருட்பாக்க ாடு ஒப்பு நோக்கினால், ன்னது மூலம் பின்னது ரை!

குறள் பாடியவர் குருநா ; அதனை மூலமாகக் ாண்டு உரை பாடியவர் ர்!

இந்த உண்மையை வள்ளு புகழ்பாடும் புலவர்களி யும் பலர் இன்னமும் னரவில்லை. ஏன்? வள்ள ர் புகழ்பாடும் பத்தர்கள லயும் இதுதான்!

கள்ளுண்ணாமை

எலுமிச்சம் பழத்தை சுவைக்காமலிருக்கும் போதே- நேரிலே காணும் போது நாவிலே நீர் ஊறுகிறது. புளிப்பு உணர்ச்சியால ஆட்கொள்ளப்படுகிறோம்.

ஆனால் மனிதனை நிலை தடுமாறச்செய்யும் சக்தி பெற்ற மதுவை தினைப்பதாலோ நேரிலே காண்பதாலோ 'போதை' உணர்ச்சி, அவனை ஆட்டிப் படைப்பதில்லை. அதை அருந்தியபிறகே மயக்கமும் அது தரும் மன உற்சாகமும், இன்பவெறியும் தலையெடுக்கிறது.

அதிக போதையில் வீழ்ந்தவனையும் நிமிரச் செய்யும் வல்லமை எலுமிச்சைக்கு உண்டு என்பார்கள். எலுமிச்சை, மதுவை வெல்லக் கூடியது. மதுவின் ஆதிக்கத்தை முறியடிக்கக் கூடியது. கள்ளைப்போலின்றி கண்ட மாத்திரத்தில் நாவில் புளிப்பு உணர்ச்சியைப் பொழியும் தன்மை வாய்ந்தது.

எலுமிச்சையைப் போன்றதே காமமும் என்பதை வள்ளுவர் சொல்லாமற் சொல்லுகிறார். இன்ப விருந்தளிக்கும் எழில் நிறைப் பெண்ணாளை—அவள் இடை காட்டும் நெளிவை—இதழ் காட்டும் சுவையை—இருவிழி காட்டும் குளிரை—பிரிந்திருக்கும் காதலன் தொலைவிருந்து எண்ணிப்பார்த்தே களிப்படைய முடியும்.



விரக விருந்தளிக்கும் பாவை விழியெதிரே நிற்பதைக் கண்டாலே மகிழ்ச்சி பொங்கும். இந்தப் பெருமை வெற்றியூட்டும் மதுவுக்குக் கிடையாது.

மங்கை தரும் சுகத்திற்கே நினைத்துக் களித்தலும் கண்டு மகிழ்தலுமான சிறப்புகள் உண்டு என்று செந்நாப் போதார் சித்திரத்தமிழில் தீட்டுகிறார்.

அகநால் தான் போலும் பெண்களை எலுமிச்சம் பழம் எனவும் சிறப்பிக்கின்றனர்.

கலைஞர்
## மு. கருணாநிதி

இரண்டுமே கண்டவுடன் உணர்ச்சியூட்டுவன அல்லவா?

மதுவை—கண்டவுடன் உணர்ச்சி கிளப்பும் எலுமிச்சை வெல்கிறது.

அந்த எலுமிச்சையை— நேரில் கண்டவுடன் மட்டுமன்றி, நினைத்தவுடன் மகிழ்ச்சியூட்டும் காதற் பெண்டிர் வெல்லுகின்றனர்.

அந்தச் சிறப்புக்கு இதோ குறள்.

"உள்ளக் களித்தலும்
காண மகிழ்தலும்
கள்ளுக்கில்
காமத்திற்கு உண்டு."

—இத்தகு சொல்லோவியங்களைத் தந்த வள்ளுவப் பெருந்தகையின் இரண்டாயிரமாண்டு நிறைவு விழாவையொட்டி சிறப்பிதழ் வெளி வருகிறது. அந்தச் சிறப்பிதழுக்கு எனது வாழ்த்துக்கள்!

# தினபதியின் தறுதலைத்தனம்


தமிழரசுக் கட்சி நேற்றுச் செய்த முடிவுகள்.
நேரடி நடவடிக்கை கைவிடப்பட்டது
ஆனால் போதனமொழி மாற்றத்துக்கு எதிர்ப்பு

இம்மாதம் 23 ம் திகதி நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இந்நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பார்கள். திரு. அமிர்தலிங்கம் வெளியிட்ட அறிக்கையில் அத்தீர்மானங்கள் இருந்தன. செயற்குழுக்கூட்ட முடிவை 24ந் திகதி வீரகேசரி மேற் கண்ட தலைப்புடன் வெளியிட்டிருந்தது.

அன்றைய தினகரன் வெளியிட்ட தலைப்பையும் கீழே பாருங்கள்!


'சிங்களம் திணிக்கப்படின் எதிர்த்தே தீருவோம்'
தமிழரசுக் கட்சி செயற் குழு நேற்று நிறைவேற்றிய தீர்மானம்
(தினகரன் நிருபர்)

இதே நேரத்தில் தினபதி செய்த தறுதலைத்தனத்தை கீழே காணுங்கள்!


தினபதி
தினபதி கூறியது போல் போராட்டம் கைவிடப்பட்டது
கல்வி மந்திரிக்கு தமிழரசுக் கட்சி பாராட்டு
பௌத்த பாடசாலைகள் போதனமொழி விஷயத்தில் செயற் குழு பூரண திருப்தி

கல்வி மந்திரிக்கு தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தில் பாராட்டுத் தெரிவித்து ஒருவார்த்தை கூட இடம் பெறவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தனது முந்திய செய்தி உண்மை யென்று காட்டுவதற்காக முழுப்பொய்யான தலைப்பை கொடுத்து தறுதலைத்தனம் செய்திருக்கிறது தினபதி.

(தமிழரசு செயற்குழுத் தீர்மானங்களை மற்றோரிடத்தில் காண்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் திணிக்கப்படுவதை முழு மூச்சுடன் எதிர்ப்போம்

## தமிழரசு செயற்குழு தீர்மானம்

தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களத்தை போதனமொழியாகத் திணிக்கும் அரசாங்கத்தின் நேரடியான அல்லது மறைமுகமான எவ்வித முயற்சியையும் தமிழரசுக் கட்சி தனது முழுப் பலங்கொண்டு எதிர்க்கும்.

—மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழரசுச் செயற்குழு ஏக மனதாக முடிவு செய்துள்ளது.

இலங்கை அடங்கிலும் சகல தமிழ்ப் பிள்ளைகளுக்கும் தமிழே போதன மொழியாக இருக்க வேண்டுமென்ற அடிப்படைத்தத்துவத்தை நிலைநாட்டுவதற்கு ஒன்றுபட்டுழைக்க முன் வரும்படியும் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ள மூன்று தனியார் பாடசாலைகளையும் சுற்றியிருக்கும் தமிழ்ப் பெற்றோர்கள் சிங்களத்தை தமது குழந்தைகளின் போதன மொழியாக தெரிவு செய்வதை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் திவிர பிரசுரத்தில் இறங்கவும் கட்சி செயற்குழு முடிவு செய்திருக்கிறது.

சமூக ஏற்றத் தாழ்வு தடை சட்டத்துக்கு திருத்தங்களைச் சமர்ப்பிப்பதென்றும் அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கூறப்படும் மக்களின் குறைகளைத் திர்ப்பதற்கு உடனடியாக முயற்சிகள் மேற் கொள்வதென்றும் செயற்குழு மேலும் திர்மானித்திருக்கிறது.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ. தலைமையில் நடைபெற்ற இச் செயற்குழுக் கூட்டத்தின் இறுதியில் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

"தமிழ்ப் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட மூன்று தமிழ்ப் பாடசாலைகளையும் சிங்களத்தை போதன மொழியாகக்கொண்ட பாடசாலைகளாக மாற்றும் படி கல்வியமைச்சு முதலில் விடுத்த உத்தரவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்யத் தீர்மானித்ததை தமிழரசுக் கட்சி வரவேற்கிறது. இப் பாடசாலைகளை அமைத்து நடத்துவதில் தமது நேரத்தையும் பணத்தையும் தற்போது செல விட்டு வரும் ஆசிரியர்கள், அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்று கட்சி திர்மானிக்கிறது.

"பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி வெள்ளையறிக்கையின் படி ஒரு பிள்ளைக்கு தாய் மொழியே போதன மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சியும் அரசாங்கத்தில் அங்கம் வகித்து வந்த நேரத்தில் அரசாங்கம் விருப்பம் என்ற போர்வையின் கீழ் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களத்தை போதன மொழியாக்கும் எந்த முயற்சியையும் தனது பலம் அத்தனையும் திரட்டி எதிர்ப்பதென்று தமிழரசுக் கட்சி தீர்மானிக்கிறது.

இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதன மொழி என்ற கொள்கையை நிலை நாட்டுவதற்கு ஒன்றுபட்டு செயலாற்ற வருமாறு தமிழ் மக்களை தமிழரசுக் கட்சி அழைக்கிறது."

## தீண்டாமையொழிப்புக்கும் தீவிர நடவடிக்கை!

அங்கீகரித்திருந்த இக்கொள்கையிலிருந்து அது விலகிச் செல்ல முயல்வதை அண்மையில் கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கை உணர்த்துகிறது.

அரசாங்கம் அங்கீகரித்திருந்த இக்கொள்கையிலிருந்து அதுவிலகிச்செல்லமுயலுவதை நமது கட்சி பலமாகக் கண்டிக்கிறது. பெற்றோர்

சமூக ஏற்றத் தாழ்வு தடைச் சட்டத்துக்கு கொண்டு வரப்படவேண்டிய திருத்தங்களை ஆராய்ந்து சமர்ப்பிக்குமாறு மூதவை உறுப்பினர்களான திரு. மு. திருச்செல்வம் சு. நடராசா, சி கதிரவேற்பிள்ளை பா. உ. ஆகியோரைக் கொண்ட குழு விடம் செயற் குழு பணித்துள்ளது.

## பொன்னம்பலத்தின் பொய்ப் பிரச்சாரங்கள்!

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைநாட்ட திரு. பொன்னம்பலம் ஒரு சிறு நடவடிக்கை தானும் எடுத்ததுண்டா? தமிழரசுக் கட்சி நடத்திய போராட்டங்களையெல்லாம் முறியடிப்பதற்கு உதவி புரிந்ததையும் தமிழரசுக் கட்சி வென்றெடுக்க முயன்ற தமிழுரிமைகளுக்கெல்லாம் குறுக்கே நின்று நாசமறுத்ததையும் தவிர தமிழ் காங்கிரஸ்செய்ததென்ன?

சிங்களச் சட்டத்தை மீறி தமிழ் பேசும் மக்கள் இந் நாட்டில் வாழமுடியாதென்பது எனக்குத் தெரியும்—அதனுல் தான் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிப்பதை நான் தடுக்கவில்லையென்று கூறும் தமிழ் காங்கிரஸ் தலைவர் அதே மூச்சில் தமிழரசுக்கட்சி தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாக முழுப்பொய் மூட்டையை அவிழ்த்து விடுகிருர்.

தமிழ் இனம் முழுவதும் சிங்களம் படிப்பதற்கும் சில ஆயிரம் தமிழ் அரசாங்க ஊழியர் சிங்களம் படிப்பதற்கும் நிறைய வேறுபாடுண்டு. புதிய ஊழியர்கள் தங்கள் உத்தியோகத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக, தாமே ஒப்புக் கொண்டு அரசாங்கசேவையில் சேர்ந்த நிபந்தனைப் பிரகாரம் ஒரு குறிப்பிட்டளவு சிங்களத் தேர்ச்சி பெறுவதை தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழினத்தின் சுதந்திரப் போராட்டம், மிக நீண்ட காலப் போராட்டமாகும். இனத்தின் விடுதலை என்று கிடைக்கும் என்று யாரும் சோதிடம் கூறமுடியாது. எனவே தமிழினத்தின் விடுதலைப்போராட்டம் வெற்றியடைவதற்கிடையேஆயிரக் கணக்கான புதிய ஊழியர்கள் வேலை இழந்து நடுத் தெருவில் நிற்கும் நிலை தோன்றுவதை பொறுப்புள்ள ஒரு அரசியல் இயக்கம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவேதான் புதிய ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கு கட்சிஇணங்கியது.

ஆனல் அதே நேரத்தில் தமிழினம் முழுவதும் சிங்களம் படிப்பதையோ, தமிழினத்தின் தொண்டைக்குள் சிங்களத்தை திணிப்பதையோ. தமிழரசுக்கட்சி இன்னும் கடுமையாக எதிர்க்கிறது தமிழினம் இனஅடிப்படையில் சிங்களத்தைப் படிக்க ஆரம்பித்தால், காலப் போக்கில் இன்று தமிழுக்கு இருக்கும் அற்ப சொற்ப உரிமைகளையும் பறிகொடுத்துதனதுதனித்துவத்தையும் இழக்க நேரிடும். சிங்களவெறியர்கள் இன்று காணும் கனவு நனவாகிவிடும. ஆம், சிங்கள இனம் தமிழினத்தை கபளீகரம் செய்து விடும். இலங்கை முழுவதும்சிங்களமும்பௌத்தமுமே கோலோச்சும்.

இந்த ஆபத்தை உணர்ந்து தான தமிழரசுக்கட்சி தமிழர்கள் சிங்களம் படிப்பதை முழுமூச்சுடன் எதிர்க்கிறது. ஆனல் தமிழ் காங்கிரஸ் தலைவரோ 'சிங்களச்சட்டத்தை மீறித் தமிழர் வாழ முடியாது' என்று கூறி தமிழினத்தின் மத்தியில் தோல்வி மனப்பான்மையையும், அடிமைச் சிந்தனையையும் புகுத்தப் பார்க்கிருர்.

தமிழரசுக்கட்சி சிங்களத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாக தமிழ் காங்கிரஸ் தலைவர் கூறுவது முழுப் பொய் என்பது ஒருபுறமிருக்கட்டும். அது உண்மையென்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம், அப்படிப்பார்த்தால், தமிழரசுக் கட்சியாவதுவடக்குகிழக்கில் தமிழுக்கு நிர்வாக மொழி அந்தஸ்து சட்டபூர்வமாக வழங்கப்பட்ட பின்னரே சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனல், தமிழ் காங்கிரஸ் தலைவரோ, தமிழுக்கு எந்தவித உரிமையும் இல்லாதிருந்த நேரத்தில் தனிச்சிங்களப் பேரபாயம் தலைக்கு மேலால் பாய்ந்த வேளையில் —1956 ம் ஆண்டு மத்தியில் தனிச்சிங்களச் சட்டத்தை ஏறறுக் கொண்டார். இதை அவர் மறுக்க முடியுமா?

1960ம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு டட்லி சேனநாயகாவை ஆதரித்து நின்ற போதும் தமிழ்காங்கிரஸ் தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது என்பதை மறுக்க முடியுமா? தமிழரசுக் கட்சியாகுதல் வடக்கு கிழக்குக்கு தமிழ் ஆட்சி மொழியாக்கப் படுவதை யூ. என். பி. ஏற்றதால் அக்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கம் அமைத்தது. அப்பொழுது தமிழ் காங்கிரஸ் தலைவர் என்ன செய்து கொண்டிருந்தார்? சம அந்தஸ்து ற்றி வாய்ச்சவால் அடிப்பவர்கள் இலங்கை முழுவதும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கொடுத்தால் மட்டுமே உம்மை ஆதரிப்போம் என்று அன்று பிரதமரிடம் ஏன் கோரவில்லை? எந்த நிபந்தனையின் பேரில் டட்லியை ஆதரித்தார்கள்?

இன்று தமிழரசுக்கட்சி சிங்களத்தை ஏற்றுக்கொண்டு விட்டது; நாங்கள்தான் சம அந்தஸ்து வீரர்கள் என்று மக்கள் முன்னின்று முழுப் பொய் சொன்னல் அதை ஏற்பதற்கு மக்கள அவ்வளவு முட்டாளகளா என்ன?

1956ம் ஆண்டிலிருந்து தமிழ்அறிஞர்களாலும் கல்விமான்களாலும் எழுப்பப்பட்டுவரும்தமிழ்ப்பல்கலைக்கழக கோரிக்கையை முறியடிப்பதற்காக 1965ம் ஆண்டுக்குப் பின் இந்துப் பல்கலைக்கழகம் என்றஇரவல் கூச்சலைக்கடன் வாங்கிக் கொண்டு தமிழ் காங்கிரஸ் ஆடிவரும் கபட நாடகங்கள் மக்களுக்கு நன்கு தெரியும். இந்தத் துரோகத்தனத்துக்கு அடுத்த பொதுத்தேர்தல் சரியான பாடம் புகட்டுவது உறுதி.

சிங்கள ஏகாதிபத்தியத்தை இந் நாட்டில் தமிழ் பேசும் மக்களின் மேல் திணிக்க விரும்பும் தீவிர சிங்கள வாதிகளின் கையாள் தான் திரு. பொன்னம்பலமும் அவரது கட்சியினரும் என்ற உண்மை நெட்டத் தெளிவாகி விட்டது.

பாராளுமன்றத்துக்கு எந்தக் கட்சியை அனுப்பினலும் ஒரே கட்சியாக அனுப்ப வேண்டும் என்று கூறியிருக்கிருர் பொன்னம்பலம்; பொன்னம்பலத்துக்கு அந்தக் கவலை தேவையில்லை. தமிழ் காங்கிரசுக்கு பெரிய சவக்குழியை தமிழ் மக்கள் தோண்டிவிட்டார்கள். அடுத்த பொதுத் தேர்தலுடன் புதைத்து அந்தியேட்டி செய்து விடுவார்கள் என்பது நிச்சயம்.

## நபிகள் நாயகம்..

(10ம்பக்கத் தொடர்ச்சி)

செய்து யானைப் படைகளை கஃபாவிற்குச் செல்லுமாறு பணித்தான். அரசனின் கட்டளையை நிறைவேற்ற யானைப் பாகர்கள் எடுத்த முயற்சி விண்பாடானது. யானைப் பாகர்கள் யானைகளை எவ்வளவோ துன்புறுத்தியும்கூட அநத யானைகள் நின்ற இடத்தைவிட்டு ஒரு அடிகூடப் பிசகவில்லை. மஹ்மூத் என்ற தலைமை யானை அந்த இடத்திலேயே விழுந்துபடுத்துவிட்டது. படைகள் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அம்மாமிச மலைகள் அசையயே இல்லை.

இச்சமயம் ஜித்தா கடற்கரையின் தென்கோடியிலிருந்து கருநிறமான பறவைகள் கூட்டங்கூட்டமாக பறந்து வந்தன. ஒவ்வொரு பறவையினுடைய கால்களிலும், அலகிலும் பொடிப் பொடிக் கற்கள் இருந்தன. அப்பறவைகள் யானைப் படையை அடைந்ததும் தாம் வைத்திருந்த கற்களை யானைப் படைகள மீது எறிந்தன. அக்கற்கள் எவரெவர் மீதுபட்டனவோ அவர்களெல்லாரும் மிருகங்களால் மென்னப்பட்ட வைக்கோற் சக்கை போலானர்கள்.

கஃபாவை இடித்துத்தள்ள மறுத்த அந்த யானைப் படைகளைத்தவிர மற்றெல்லாரும் இக்கதிக்கு இலக்கானர்கள். இக்காட்சிகள் யாவற்றையும் ஆங்காங்கே மலைக்குகைகளிலே ஒளித்திருந்த மலைவாசிகள் கண்கூடாக இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அற்பம், சிறிய பறவைகளால் ஒரு மாபெரும் சேனையையே அடியோடு வேரறுத்துவிட்டான் என்ருல் இறைவனின் சக்தி எவ்வளவு தத்துவம்வாய்ந்தது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?

இந்த அதிசய நிகழ்ச்சிக்குப் பின்னேதான் பெருமானர் (ஸல்) அவர்கள் இப்பூவுலகிற்குப் பிரசன்னமானர்கள்.

யானைப்படைகளை அச் சிறிய படைகள் எவ்வாறு அழித்தனவோ அதே போன்றேதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அறியாமையால் சூழ்ந்திருந்த [illegible]
[illegible] இங்கேயும் இறை சக்திதான் துலங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்பக்கம் வந்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னுடன் பிரிக்க முடியாத அளவு பிணைந்திருக்கிறது.

இதனுல்தான் அண்ணு சொன்னுர்—தமிழன் சொத்திழப்பான், சுகமிழப்பான், நாடிழப்பான், நகரிழப்பான், தன்னிடமுள்ள அத்தனையையுமே இழக்க தயாராவான்—ஆனுல் தமிழை மட்டும் இழக்க மாட்டான் என்று.

நண்பா, இந்தப் பெரிய உண்மையை, நமது கல்வியமைச்சரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அதனுல் நெருப்புடன் விளையாடிப்பார்க்கிருர்.

நண்பா, தமிழரசுக்கட்சியின் எதிர்ப்புக்குரல் கல்வி அமைச்சரைச் சிறிது பின் வாங்கவைத்து விட்டதென்றுலும் பெற்றுர் விருப்பம் என்ற முக மூடியின் கீழ் தமிழ்ப் பிள்ளைகளிடம் சிங்களத்தைத் திணிப்பதற்கு இன்னும் அவர் திட்டமிட்டிருக்கிருர் என்பதை புதிய சுற்றறிக்கை நிரூபிக்கிறது.

என்றுலும் தோழா, ஜுன் முதலாந்திகதி ஏற்படஇருந்த நெருக்கடி, தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பால் தற்காலிகமாக நீங்கி விட்டது. ஆமாம்' தற்காலிகமாகத் தான்; நிரந்தரமாக வல்ல. பெற்றுர் விருப்பம் என்ற போர்வையின் கீழ் சிங்களத்தை மீண்டும் போதனு மொழியாக்க முயற்சிகள நடத்தால் அதை எதிர்த்துப் போராடியே தீர வேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டே தீரும்.

நண்பா, சிலர் நினைப்பது போல தமிழரசுக்கட்சி, போராட்டத்தைத் தேடி அலையும் கட்சியல்லவென்பதும் கூடியவரை நேரடி நடவடிக்கைகளைக் கட்சி தவிர்க்கவே முயலும் என்பதும், இன்றியமையாத நிலை ஏற்படும் போதுதான் அது போராட்டத்தில் குதிக்கும் என்பதும் கடந்த கால வரலாறு காட்டும் உண்மை. இந்தஉண்மையைப் பாடசாலைப் பிரச்சினையும் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

நண்பா, இனித்தான் நமது இயக்கத்தவர் பணி கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். குறித்த மூன்று பாடசாலைகளிலும் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்ருேர்களைச் சந்தித்துச் சிங்களத்தைப் போதனு மொழியாக ஏற்பதால் ஏற்படக் கூடிய தீமைகளை எடுத்து விளக்கிட வேண்டும். பௌத்த சிங்களத்தைத் தழுவுவதால், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள், தொல்லைகள் ஒரு போதும் திராதென்பதை அவர்கள் உள்ளங்களில் தைக்கும் வண்ணம் கூறிட வேண்டும்.

சிங்கள பௌத்தர்களிடையே எவ்வளவு கொடூரமான சாதி வேறுபாடு புரையோடிக் கிடக்கிறதென்பதையும் தமிழ் மக்களைப் பிரிவினை செய்து பௌத்த சிங்கள ஆட்சியை வடக்கிலும் நுழைக்கவே இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிருர்கள் என்பதையும் எடுத்துக் கூறிட வேண்டும்; தீண்டாமைக் கொடுமை மாவிட்டபுரத்தில் மட்டுமல்ல மல்வத்தையிலும் இருக்கிறது என்ற உண்மை பகிரங்கப் படுத்தப் படவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் சுயநலமிகளின் வெளிவேஷம் கிழித்தெறியப்பட வேண்டும்.

ஆகவே தோழா, சிங்களத்தை ஏற்பதால் பௌத்தத்தைத் தழுவுவதால் - ஏற்படக் கூடிய அபாயங்கள் அம்மக்களுக்கு தெளிவாக்கப்பட்டால் அவர்கள் செந்தமிழை விலை கூற ஒரு போதும் உடன்பட மாட்டார்கள். எனவே உன் போன்றவர்களின் உடனடிக் கடமை அதுதான்.

சிங்களத்தை போதனு மொழியாகத் திணிக்க விரும்பும் கல்வியமைச்சரின் கையாட்களும் அதிகாரிகளும் சலுகைகளும் ஆசை வார்த்தைகளும், பொய்களும் புனை சுருட்டுக்களும் கூறி படிக்காத அப்பாவி மக்களிடம் சம்மதக் கடிதம் பெற்று சிங்களத்தை திணிக்க முற்படலாம். அந்த முயற்சிகளில் அவர்கள் இறங்கியும் விட்டார்களாம். இந்த முயற்சி உடனடியாக முறியடிக்கப் பட வேண்டும்;

நண்பா, நமது இயக்கமும், இயக்கத் தலைவர்களும் கண்ணுக்குள் எண்ணெய்விடுவது என்பார்களே, அதுபோல இராவிட்டால், எந்த நிமிஷமும் நம் மக்கள் மீது சிங்களம் போதனுமொழியாகத் திணிக்கப்படும் அபாயம் இருந்துகொண்டே உள்ளது.

தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழே போதனு மொழியாக இருக்க வேண்டும். இதில் பெற்றுர் இஷ்டம் என்ற வார்த்தைப் பிரயோகத்துக்கு துளியும் இடமிருக்கக் கூடாது. இந்த நிலை சட்டத்திலிடம் பெறும்வரை நமது எதிர்ப்பியக்கம் சிறிதும் தளரக் கூடாது.

நண்பா, சில சலுகைகளுக்காக தாய் மொழியை மாற்ற நினைப்பவர்களுக்கும், பணத்துக்காகவோ வேறு சலுகைகளுக்காகவோ பத்துமாதம் சுமந்து பெற்ற தாயைத் துரத்தி விட்டு வேருெருத்தியை தாயாக ஏற்பவர்களுக்கும் வேறுபாடு இருந்திட முடியாது; இருசாராருமே சண்டாளர்கள். இத்தகைய இனத் துரோகம் புரியும் சண்டாளர்கள் தமிழினத்தில் இருக்க முடியாது; அப்படித் துரோகம் புரிபவர்கள் இருந்தால் அவர்கள் தமிழினத்தின் அசல் வித்தாக இருக்கமாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் யாராவது இருந்தால், தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழும் யோக்கியதையையே இழந்து விடுவார்கள்;

நண்பா, பெற்றுர் விருப்பம் என்ற போர்வையின் கீழ் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களத்தை திணிக்க முயலும் சதிச் செயலை முறியடிக்க, அணியமைத்துப் பிரசாரம் செய்யப்பட வேண்டும். தேவை ஏற்படும் போது உரிமைப்போரில் குதிக்கவும் தயாராகஇருந்திடவேண்டும் அதே வேளையில் தமிழினத்தையே துண்டு போடதயராகிவிட்ட ஜாதி என்றும் பெரு அரக்கனை மிக விரைவில் வெட்டி வீழ்த்துவோம் என்று உறுதியெடுப்போம்!

உன்
அன்புத் தோழன்
கோவை

## எதிர் நடவடிக்...

(1பக்க தொடர்ச்சி)

மூத்து வேட்டை நடத்தப் படுவதாகத் தெரிகிறது. இதனைக் கண்டித்து தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம், கா.பொ. இரத்தினம், வி. தர்மலிங்கம், சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் பிரதமருக்கு தந்தி அனுப்பியிருந்தனர்.


## ஒரு ரகசிய மருந்து!

ஆண்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டது!

ஜனனேந்திரம் தளர்ச்சியடைந்த ஆண்கள் மாத்திரம் விபரங்கட்கு கேட்டெழுதுங்கள்;

வைத்திய நிபுணர்:

**பீ. எம். திஸ்ஸாநாயக்க,**

த—பெ—இல—1281, கொழும்பு-10;


## எங்கே நீயோ நானும் அங்கே உன்னேடு

(2ம்பக்கத் தொடர்ச்சி)

விரு...ப்பமா... போ... நீ... போ... போய் என்... பவானியை வரச் சொல்லு...ம்... போமட...''

அதைத் தொடர்ந்து 'பட் பட்' என அடியின் ஓசையும் அந்தப் பெண்ணினது விம்மலும் கேட்கின்றன. ரகுவின் நரம்புகள் எல்லாம் புடைத்தெழுகின்றன. ஒரு மனிதன் எவ்வளவுதான் மிருகத்தனமாக நடந்து கொண்டாலும் ஒரு பெண்மேல் கைவைத்து அடிக்கும் அளவுக்கு அவன் துணிவுபெறுவதாக இருந்தால் அவனை மிருகம் என அழைப்பதைவிட மிருகத்தைவிடக் கேவலமானவனுகத்தான் நினைக்க வேண்டும் என்று அவன் உள்ளங் குமுறுகிறது.

அந்த உள்ளக் குமுறலின் இடையிலும் குடிவெறியில் இருக்கும் ஜெயநாதனுக்காக அவன் மனம் இரங்கிக் கொள்கிறது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந் திண்மை உண்டாகப் பெறின்' என்ற வள்ளுவர் குறள் அவன் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தக் கற்புநிலைதான் பெண்ணைத் தெய்வமாக மதிக்கச் செய்கிறது. அப்படியான புனிதமான கற்பை ஒரு பெண்ணுனவள் போற்றிக்காக்க முடியாவிட்டால் அங்கே பெண்மைக்கே மாசுபடிந்து விடுகிறது. அப்படியான ஒரு நிலைக்குத் தன் மனைவி வருவதை எந்த ஆண்மகனும் விரும்பவும் மாட்டான். அப்படியொரு குற்றத்தை அவனுல் மன்னிக்கவும் முடியாது.

அப்படியான ஒரு மாபெருந் தவறைத்தான் இந்தப் பெண்ணுஞ் செய்திருக்க வேண்டும். அதுதான் குடிவெறியில் கூட அவன் அவளைப்பற்றி இவ்வளவு கேவலமாகப்பேசவேண்டியுள்ளது. இண்டைக்கு அவன் வரவில்லையா என்று அவன் கேட்டதிலிருந்து யாரோ ஒருவன் இந்தப் பெண்ணை நாள்தோறும் சந்திக்க வருவதாக இருக்க வேண்டும். அல்லது ஒரு கணவன் அப்படிக்கேட்டிருக்கமாட்டான். இவற்றின் மத்தியிலும் ரகுவுக்கு உள்ளூர ஒரு மகிழ்ச்சி. ஜெயநாதன இன்னும்பவானியை மறக்கவில்லை என்பதே அந்த மகிழ்ச்சிக்குரிய அடிப்படைக் காரணமாகும்.

பவானி அவன் மனதில் நீக்கமற நிறைந்து விட்டான் என்ற அந்த ஒரு நம்பிக்கை அவனுக்கு ஒரு திருப்தியை அளிதததது. அங்கே அவன் கண்ட சூழ்நிலையில் பவானியைஜெயநாதனிடம் ஒப்புவிப்பது அவ்வள்வு சிரமமாக இருக்குமென அவன் எண்ணவில்லை. ஆயினும் அவனது தற்போதைய மனைவியை நினைத்தபோது அவனுக்குச் கவலைபாக இருந்தது. பவானியை ஜெயநாதன் ஏற்றுக் கொண்டால் இத்தப் பெண்ணின் கெதி என்னுவது? ஏற்கெனவே திருமண வாழ்வில் எந்தவித சுகத்தையும் அனுபவித்தறியாத இந்த அபலைப் பெண் கணவன் என்கிற உரிமையும் இழக்க நேரிட்டால் நிட்சயமாக அவள் தற்கொலை தான் செய்து கொள்ள வேண்டும் அல்லது பைத்தியமாக மாற வேண்டும். இந்த இரண்டு அசம்பாவிதங்களையும் தடுக்க வேண்டுமானுல் பவானியும் இந்தப் பெண்ணும் ஒரு மித்து வாழ்க்கை நடாத்த வேண்டும். அது நடக்கக் கூடிய ஒன்ரு...? ஒருவேளை பவானி அதற்கு உடன்பட்டாலும் இந்தப் பெண் உடன்பட வேண்டுமே...கடவுளே என் பவானிக்கு எப்படியாவது தாலிபாக்கியம் அளித்து விடு. ஜெயநாதன் வீட்டு வேலைக்காரியாக என்றுலும் அவள் வாழட்டும். இராமர் இருக்குமிடந்தான் சீதைக்கு அயோத்தியாக இருந்தால் ஜெயநாதன் இருக்குமிடந்தான் பவானிக்கும் சுவர்க்கமாக இருக்க வேண்டும்.

பலவாருகச் சிந்தித்த ரகுவுக்கு ஒரேயொரு முடிவுக்குத்தான் வர முடிந்தது. அடுத்தநாட் காலை எப்படியாவது பவானியை அழைத்து வந்து ஜெயநாதனிடம் ஒப்புத்து விடுவதே அது. ஜெயநாதன் குடிபோதையில் பேசிய வார்த்தைகளில் இருந்து அவன் இன்னும் பவானியை மறக்கவில்லை யென்பது தீர்மானமாய் விட்டது. ஆகவே அந்தப் பெண்ணிடம் இதுபற்றி ஒரு வார்த்தை கூறிவிட்டால் அவள் அந்தத் தாக்குதலுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வாள் என நினைத்தான். அந்தப் பெண்ணிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என யோசித்தவன் இரண்டு மூன்றடி முன்னை வைத்து...இந்தாங்க... அம்மா... அம்மா...உங்களைத்தான் என்று அழைக்க அந்தப் பெண் ஓடிச்சென்று மின்சார விசையை அமுக்கினுள். அங்கே வெளிச்சம் பரவிய போது அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். பீதியும் பயமும் நிறைந்திருந்த அந்த முகத்தைப் பார்த்து உமா நீயா! என்று அலறினுன் ரகு.

—தொடரும்

## தமிழர் பேசும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சி மாநாட்டில் கலந்து கொண்டது பற்றி எவ்விதமாகவும் குறை கூறவில்லை.

'கட்சிப்பூசல் காரணமாகத் தமிழர் இன ஒற்றுமையைஅழித்து விட்டால் அப்புறம் கட்சியும் அழிந்து விடும்.'

—இவ்வாறு சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.


## மாயாஜாலம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினுல் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்துவைக்கப் படும். மற்ற எல்லாவித மந்திரங்களும் எங்களால் செய்யப்படும்; இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி, மந்திரவாதி நிட்டம்புவ;



உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

**ராஜ பீடியை**

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "தமிழ்நாட்டைவிட ஈழத்தில் தமிழுக்கு சிறப்பிடமுண்டு"

யாழ்ப்பாணத்திலும் சரி, கொழும்பிலும் சரி நாங்கள் கண்ட காட்சிகள் சில விஷயங்களிலாவது இலங்கை வாழ் மக்கள் நம்மைவிட மேம்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையை எங்களுக்கு உணர்த்தியது. குறிப்பாக தமிழ் மொழிக்கு நம் நாட்டைவிட ஈழத்தில் சிறப்பான இடம் இருப்பதை அங்கு என்னால் காண முடிந்தது.

இலங்கை அரசாங்கத்தின் எல்லாவெளியீடுகளிலும் சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் இதே வரிசையில் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளில் எல்லாம் சிங்கள மொழியோடு தமிழ் மொழியும் பயன்படுத்தப்படுகிறது. எங்கேயாவது ஒரு மொழி கைவிடப்பட்ட நிலையில் இருந்தால் அது ஆங்கிலமாகத்தான் இருந்தது.

பஸ்களில் இ. போ. ச. (இலங்கைப் போக்கு வரத்து சபை) என்று குறிக்கப்பட்டுள்ளது. விமானங்களில்கூட சிங்களம் ஆங்கிலத்தோடு தமிழில் 'இலங்கை விமான சேவை' என்று பொறிக்கப்பட்டிருப்பதை கண்டபோது எனக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது. நம்நாட்டிலுள்ள தேசியமொழிகளின் நிலை குறித்து நான் அப்போது வெட்கப்பட்டேன்.

இலங்கையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பெயருக்குப்பின்னால் பா. உ. என்றே போட்டுக்கொள்ளுகிறார்கள். நம் நாட்டைப்போன்று ஆங்கிலத்தில் எம். பி. என்று போட்டுக்கொள்வதில்லை. தமிழ் பகுதிகளில் எங்கும் எதிலும் தமிழ்தான். இந்த விஷயத்தில் சிலம்புச் செல்வருக்கு நம்மைவிட இலங்கைத் தமிழர்கள்தான் உண்மையான சீடர்கள்.

கடைகளில் பெயர்ப்பலகைகள் எல்லாம் தமிழில். பிறகுதான் சிங்களமோ ஆங்கிலமோ இடம்பெறுகிறது. தமிழ்ப்பகுதிகளில் உதாரணமாக 'பிரஸ்' என்று போடாமல் 'அழுத்தகம்' என்றும், சினிமா என்று போடாமல் 'படமாளிகை' என்றும் எக்ஸ்பிரஸ் வண்டி என்று போடாமல் 'கடுகதிவண்டி' என்றும் ரெஸ்ட் ஹவுஸ் என்று போடாமல் 'வாடி வீடு' என்றும் நல்ல முறையில் தாய்த் தமிழைப்பயன் படுத்துகிறார்கள்.

நம்நாட்டிலுள்ள பரிதாபத்துக்குரிய ஆங்கில மொழி தாசர்களில் சிலரையாவது இலங்கைக்கு அனுப்பி இவற்றைக் காட்டினாலாவது அவர்களுக்கு நல்ல புத்தி வராதா என்று எனக்கு தோன்றியது. சுருக்கமாகச் சொன்னால் நம்நாட்டில்-நம்தாய்த் தமிழகத்தில் தலைவிரித்தாடும் ஆங்கில மோகம் ஈழத்தில் கடுகளவும் இல்லை என்பது கண்டு நான் மெய்சிலிர்த்தேன்.

ஈழத்திற்கும் ம. பொ. சிக்குமிடையேயுள்ள உணர்வு பூர்வமான உறவு என்று எனக்குப்புரிந்தது.

—இவ்வாறு அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சியுடன் கூட வந்திருந்த சென்னைமாவட்ட தமிழரசுக்கழகச் செயலாளர் திரு. ம. சி. கிருஷ்ணமூர்த்தி பீ. ஏ. இலங்கைப் பயணம் பற்றி 'செங்கோல்' இதழில் எழுதி வரும் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

மீலாத் சிறப்பு கட்டுரை

# நபிகள் நாயகம் தோன்றுவதற்கு முன்..!

கிழக்கு வெளுத்தது கீழ் வானம் சிவந்தது. அது கி. பி. 270. றபியுல் அவ்வல் பிறை பத்து. வையத்தின் மையத்திலே அரேபியாத் தேச மக்கமா நகரிலே அவ் இளம் பிறைக்கீற்று உதயமானது. திங்கள் ''பஜ்ரு'' நேரம் உலகம் மிக அமைதியில் ஆழ்ந்து கிடந்தது.

மேல் வானம் அந்தகார இருளால் சூழ்ந்திருந்தகாலை அடிவானில் ஒருஒளிமிகு தாரகையுதயமாயிற்று. அச்சிறிய மின்னுந்தாரகையின் வருகையால் அகில உலகமே இருள் கலைந்து பிரகாசத்தில் ஆழ்ந்தது என நாவினிக்க காந்திமகான் பெருமையுடன் கூறிய பெருமானார் (ஸல்) அவர்கள் அவதாரமானார்கள்.

அம்மனிதப் புனிதரின் வருகைக்கு ஐம்பத்திஐந்து நாட்களுக்கு முன்னேதான் புனித கஃபதுல்லாவிலே நடந்த ஒரு மாபெரும் அதிசய சம்பவம் உலகையே பிரமிக்க வைக்கக்கூடிய தன்மையாயிருந்தது. அந்த அதிர்ச்சியுறும் இறைசக்தி நிறைந்த சம்பவம் நபி (ஸல்) அவதாரத்தின் அறிகுறியென வரலாற்று மேதைகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். எனவே தான் நபி அவதாரம் வரலாற்றில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இடம் பெற்றிருக்கிறது.

நபி அவதாரத்துக்குச் சிறிது காலத்துக்கு முன்னே ''அப்ரஹா'' என்ற பெயருள்ள அரசன் மக்காவிற்குக் கிழக்கே உள்ள எமன் நாட்டில் அரசுசெலுத்திவந்தான். துர்க்குணங்கள் அவ் அரசனிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. மக்காவிலுள்ள கஃகா அராபியர்களிடம் விஷேடமதிப்புப் பெற்றிருந்தது பற்றி அரசன் பொருமையுற்றான். எனவே தன் நாட்டின் தலைநகரான ''பென்ஆன்'' எனும் நகரில் ''குலசா'' என்ற ஒரு பெரும் கோவிலைக் கட்டினான்.

அராபியர்கள் மக்காவிற்கு சென்று ஹஜ்ஜு செய்யக்கூடாதென்றும் அதற்குப் பதிலாக தன்னுடைய கோவிலுக்கே சகலரும் வரவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்திருந்தான். ஆனால் அப்ரஹாவின் கட்டளைக்கு எவருமே தலை சாய்க்கவில்லை. அராபியர்கள் வழக்கமாக கஃபாவுக்கு யாத்திரைசென்றார்கள். இந்த விஷயம் அப்ரஹாவுக்கு மிகுந்த கவலையையும் கோபத்தையும் ஊட்டியது. இப்படி இருக்கும் சமயம் அப்ரஹாவின் கோவிலிலே யாரோ ஒருவர் மலம் கழித்து ஆபாசம் செய்துவிட்டார். இது ஒரு மக்காவாசியின் செயல்தான் என அப்ரஹாவிற்குத் தெரிய வந்தது. இன்னுஞ் சில நாட்களில் அந்தக் கோவில் தீப்பற்றி எரிந்து விட்டது. இந்தத் தீயும் மக்கா வாசிகளாலேயே மூட்டப்பட்டது எனத்தெரிய வந்தது. இந்த இருசம்பவங்களும் அவனது கோபத்துக்கு மேலும் உணர்ச்சியை ஊட்டுவதாய் அமைந்தது.

எனவே கஃபாவை இடித்து நாசம் செய்துவிட வேண்டுமென தீர்மானித்து

## "விடத்தல் நகர் இக்பால்"

ஒரு பெரிய படையுடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டான். அப்படையில் யானைகளே மிக அதிகமாக இருந்தன. அந்த யானைகளில் மிகப்பெரிய யானைக்கு ''மஹ்மூது'' என்ற பெயர் சூட்டப்பட்டிருந்தது.

தாம் பொதுமக்களுக்கு எத்தகைய இடையூறும் செய்வதில்லை என்றும், கஃபாவை மட்டுமே நாசம்செய்யப் போவதாகவும் அதற்கு எவராவது இடையூறு செய்தால் அனைவரையுமே கொன்றுவிடுவதாயும் அப்ரஹா மக்கா வாசிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தான். இதைக்கேட்ட மக்காவாசிகள் யாவரும் பீதிகொண்டு மக்காவை விட்டு ஓடிச்சென்று மலைக்குகைகளில் ஒளித்துக் கொண்டார்கள். ஆனால் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களின் பாட்டனாரான அப்துல் முத்தலிப் மாத்திரம் அச்சமின்றி மக்காவிலேயே தங்கிக் கொண்டார்கள்.

அப்ரஹாவின் படைகள் மக்காவிற்குச் சிறிது தூரத்திலுள்ள 'வாதியே முஹஸ்ஸர்' என்ற இடத்தில் தங்கி இருந்தது.

ஒரு நாள் அப்துல்முத்தலிப் அப்ரஹாவின் படைகளிடம்சென்றார். அப்ரஹா, அப்துல் முத்தலிபை அன்புடனே வரவேற்று உபசரித்து உங்கள் தேவை என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள் ''எனது ஒட்டகத்தை உமது படையினர் பிடித்துக்கொண்டார்கள். எனவேதான் அதை வாங்கிப்போக வந்தேன் என்றார்கள். இதைக் கேட்ட அப்ரஹா வியப்பு அடைந்து ''நாங்கள் உங்கள் கோவிலை உடைக்க வந்திருக்கிறோம்; அதைக் கவனிக்காமல் நீர் உமது ஒட்டகத்தைத் தேடுகிறீரே! எனச் சொன்னான். இதைக் கேட்ட அப்துல் முத்தலிப் அவர்கள் ''ஒட்டகத்துக்குச் சொந்தக்காரன் நான். ஆனால் கஃபாவுக்குச் சொந்தக்காரன் இறைவன். எனக் கூறினார்கள்.

இதைக் கேட்ட அப்ரஹா அவரின் பேச்சை அலட்சியம்

(8ம் பக்கம் பார்க்க)

---

சிந்தனை மருந்து

குளிகை — 1.

# அறியாமை

அது ஒரு பெரிய காடு. அந்தக் காட்டிலே அநேக மரங்கள் வளர்ந்தோங்கி நின்றன. அந்த மரங்களின் மத்தியிலே விசாலமான ஒரு மரம் உயரமாக வளர்ந்திருந்தது. அது உயரமாக வளர்ந்திருந்ததால் அதன் சுற்றுடலில் நடக்கும் காதல் நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்து தனக்குள் சிரித்துக் கொள்ளும். சில சமயங்களில் அதற்கு அழுகை ஏற்படுவதுமுண்டு. காதலர் ஒருவருக்கொருவர் துரோகஞ் செய்யும் போது அவர்களின் மடமைக்காக நாணும்;

சிறிய மிருகங்களைப் பெரிய மிருகங்கள் துரத்திப் பிடித்துக் கொன்று தின்னும் போதெல்லாம் அதற்கு அழுகை வந்து விடும். பறவைகளின் கூடுகளைப் பிடுங்கி எறிந்து குஞ்சுகளைத் தமக்கு இரையாக்கிக் கொள்ளும் காட்டுப் பூனைகளையும் மரநாய்களையும் காணும் போது அதற்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும்.

சில சமயங்களில் திருடர்கள் பிரயாணிகளை வழிமறித்துக் கொலை செய்து கொள்ளை அடிக்கும்போது அதற்கு இரக்கம் ஏற்படும்.

'சிச்சீ மனிதர்களாகப் பிறவாமல் மரமாகப் பிறந்ததே நல்லது என்று தனக்குள் சொல்லி ஆறுதல் பட்டுக் கொண்டது. 'புழு பூச்சியாகப் பிறந்தாலும் பறவைகளுக்கு இரையாகவேண்டும், பறவைகளாகப் பிறந்தாலும் வேடர்களாலும் மிருகங்களாலும் ஆபத்து ஏற்படும். மிருகங்களாகப் பிறந்தாலும் சிறிய மிருகங்கள் பெரிய பெரிய மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இரையாகின்றன. பரிதாபம், பெரிய மிருகங்களானால் அவற்றுக்கு மனிதர்களால் ஆபத்து அல்லது ஒன்றையொன்று போரிட்டு மடிகின்றன. மனிதன் மாத்திரம் என்னவாம்? அவனும் ஒருத்தனை ஒருத்தன் சாப்பிடப் பார்க்கிறான். பிறந்தால் மரமாகப் பிறக்கவேண்டும் அதுவல்லவோ பிறப்பு: எமது கையைக்காலை ஒடித்தாலும் நாம் சாவதில்லை. ஆகவே பெறுதற்கரிய பிறவியாகிய மரமாகப் பிறந்ததே நல்லது...'

அச்சமயம் அங்கே வந்த சில மனிதர்களின் பேச்சைக் கேட்டுத் திடுக்குற்றது மரம்.

'இதுதான் நல்லமரம்" வெட்டுங்கடா...'

ஐயோ நான் என்ன பாவம் செய்தேன். என்னை ஏன் வெட்டுகிறீர்கள்? மரம் அலறியது.

'பெறுதற்கரியது மனிதப் பிறவியென மனிதன் கருதுகிறான், என்னே அறியாமை?' யாரோ சிரிக்கிறார்கள்; சிரித்தது யார்? மனிதனால் அறிய முடியவில்லை.

—அனந்ததேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினபதி ஏட்டின் 192 வது இலக்க நிருபராகப் பல மாதங்கள் கடமையாற்றி, தாம் அனுப்பும் செய்திகள் தினபதி அலுவலகத்தில் திரிக்கப்படுவதையும், தினபதியின் தமிழ்த் துரோகத்தையும் கண்டு மனம் கொதித்து அப்பதவியை உதறி எறிந்தவர் திரு. பொ. சண்முகநாதன். அவர் தாம் விலகிய போது தினபதியின் பிரதம ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தைச் சுதந்திரன் பல வாரங்களுக்கு முன் பிரசுரித்து தினபதியின் தகிடு தத்தங்களை அம்பலப் படுத்தியது. திரு. சண்முகநாதனின் கடிதம் தினபதி ஆசிரியருக்குக் கலக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இதன் காரணமாக திரு. சண்முகநாதனுக்கு சப்பைக் கட்டுக் கட்டி பதில் எழுதினர். அக்கடிதத்துக்கு திரு. சண்முகநாதன் எழுதிய பதில் இங்கு அப்படியே இடம் பெறுகிறது. தினபதியின் முதுகுத்தோலை உரித்துக் காட்டுகிறார் சண்முகநாதன்.

# தினபதி ஏட்டின் தில்லுமுல்லுகள்

ஆசிரியர்,
''தினபதி''
5, குணசேனமாவத்தை,
கொழும்பு-12.

அன்புடையீர்!

எனது விலகல் கடிதத்திற்குப் பதிலாக நீங்கள் 12.3.1969 திகதியிட்டு எழுதிய நீண்ட கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதன்மூலம் 'தினபதி' பற்றிய இன்னும் சில உண்மைகளைப் புட்டுக்காட்டுவதற்கு எனக்கு இன்னுமொரு வாய்ப்புத் தந்திருக்கிறீர்கள்; அதற்கு மிக நன்றி:

'தினபதியைத் தமிழ் மக்கள் வெறுக்கிறார்கள் என்ற கூற்றுக்கு மறுப்பாக தினபதியைத் தமிழ் மக்கள் வெறுப்பது உண்மையானால் அது நாளிலும் பொழுதிலும் வளர்ச்சி அடைந்துவரமுடியாது. அதன் விற்பனை அதிகரித்துவரமுடியாது'' என்றெல்லாம் எழுதியிருக்கிறீர்கள். இந்தப் புழுகுமூடைகளையெல்லாம் நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா? யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை தினபதிக்கு இங்கு எத்தகைய 'செல்வாக்கு' இருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமா?

ஏனைய பகுதிகளைப் பற்றிக் கூறுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் அங்கெல்லாம் கூட நிலைமை இப்படித்தான் என நண்பர்கள் வாயிலாக அறிந்தேன். வாதத்திற்காகத் தினபதி நாளிலும் பொழுதிலும் வளர்ந்துதான் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் 'தமிழரசுக் கட்சிக்கு விரோதமான கற்பனைச் செய்திகளால் தான் அதற்கு அந்த வளர்ச்சி என்று தயவுசெய்து மனப்பால் குடித்துக்கொண்டு இருக்காதீர்கள்.

''தமிழ் மக்களைத் தங்கள் வாய் வீச்சுக்களால் ஏமாற்றித் திரியும் அரசியல்வாதிகளுக்கு தினபதி சிம்மசொப்பனமாக இருக்கிறது'' என்கிறீர்கள். அப்படியானால் ஒரு குறிப்பிட்ட கட்சித் தலைவர்கள் மட்டும்தான் தமிழ் மக்களைத் தங்கள் வாய் வீச்சுக்களால் ஏமாற்றித் திரிகிறார்கள். மற்றவர்கள் எல்லாரும் புடமிட்ட தங்கங்கள் என்கிறீர்களா? இதுதான் தங்கள் தீர்ப்பானால் அது மேற்படி தலைவர்களைத் தெரிவுசெய்த தமிழ் மக்களையே இழிவுபடுத்துவதாகவும் கேலி செய்வதாகவும் தான் முடியும்.

ஏனைய பத்திரிகைகளுக்குக் கிடைக்காத — கிடைக்கமுடியாத 'ஸ்கூப்' செய்திகளைத் தான் தினபதி வெளியிட்டு வருவதாகத் தாங்கள் பெருமைப்படுத்துவதிலும் எதுவித அர்த்தமும் கிடையாது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ''இன்றைய ஈழநாட்டுச் செய்திதான் நாளை மறுநாளைய தினபதிச் செய்தி'' என்ற ஒருகருத்துப் பரவலாக இங்கு பேசப்பட்டுவருகிறது. இது தவிர ஏதாவது ஏனைய பத்திரிகைகளுக்குக் கிடைக்காத— கிடைக்க முடியாத செய்தியாகத் தினபதியில் வெளிவருவது என்ன? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மீது நீதி நேர்மையற்ற முறையில் பாணம் தொடுப்பதுதான் அநேகமாக உங்கள் 'ஸ்கூப்' செய்தியாக இருந்து வருகிறது..

ஒரு செய்திப் பத்திரிகைக்கு இருக்கவேண்டிய நடுவு நிலைமையிலிருந்து முற்றாக வழுவி— ஓர் அரசியல் கட்சிப் பத்திரிகையிலும் கேவலமான முறையில் செய்திகளை வெளியிடுவது தான் தினபதியின் சிறப்பும் பெருமையும் என்றால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்?

உண்மைச் செய்திகளைத் தான் தினபதி பிரசுரித்துவருகிறது என்பதற்கு மாவட்ட சபை மசோதாவை உதாரணம் காட்டி இருக்கிறீர்கள்.

'மாவட்டசபை மசோதா வராது' என்ற தினபதிச் செய்தி சரியாகிவிட்டதாக கூரைமேல் ஏறிக் கொக்கரிக்கிறீர்களே! இது 'காக்கை உட்காரப்பனம்பழம் விழுந்த கதையைத் தான்' எனக்கு சரிதான்: ஆனால் உங்களிடமிருந்து நியாயம்கிடைக்குமென்ற நம்பிக்கைதான் எனக்குத் துளிகூடக் கிடையாதே! தவிர உங்கள் விசாரணையும் தீர்ப்பும் எப்படி இருக்கும் என்பதையும்தான் நான் ஏற்கனவே அறிவேனே! சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மறுப்புத் தெரிவிக்காமைக்கும் அதுதான் காரணம். அதோடு நீங்கள் அத்தி பூத்தாற்போல் எப்போதாவது ஒரு நாள் இப்படியான செய்திகளை வெளியிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவிப்பதில் அர்த்தம் உண்டு. ''ஆனால் உங்கள் தொழிலே இதுவாக இருக்கும்போது அவர்களும் தினபதி சம்பந்தப்பட்ட மட்டில் ஒன்றும் பேசாமல் தூர இருப்பதையேபுத்தியாகக் கருதுகிறார்கள்போலும்!

அன்றியும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மறுப்பு அனுப்பினால் அந்த மறுப்பையும் திரித்து உங்களுக்குச் சாதகமாக வெளியிட்டு திரிவுபடுத்துகிறதே தவிர, உங்கள் அரசியல் தீர்க்கதரிசனத்தை அல்ல! தமிழ் மக்களுக்கு அற்பசொற்ப சலுகைகள்கூட கிடைத்துவிடக்கூடாது என்று திட்டமிட்டுச் செயலாற்றிவந்த வகுப்புவாத இயக்கங்களும் — அதிலும் முக்கியமாக உங்கள் சகோதரப் பத்திரிகைகளும் தான் மாவட்ட சபை மசோதா வராததற்கு முக்கிய காரணங்களாக இருந்த சக்திகள் எனலாம்.

இவைகள் வேண்டுமானால் மசோதா வராததையிட்டுப் பெருமைப்படலாம்; ஆனால் இதை நீங்களும் பெரிதுபடுத்தி, 'நாம் சொன்னது சரியாகிவிட்டது' என்று சொல்லுவதற்கு உங்களுக்கு கொஞ்சம்கூட வெட்கமாக இல்லையா?

இனி 1968ஆகஸ்ட் இரண்டாம் திகதி தினபதியில் வெளியாகிய எனது செய்திக்கு வருகிறேன்.

''அச்செய்தி பிழையாகவோ திரித்தோ பிரசுரிக்கப்பட்டிருந்தால் தாங்கள் ஏன் அப்போதே ஆட்சேபனை தெரிவிக்கவில்லை? ஏன் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மறுப்புத் தெரிவிக்கவில்லை?'' என்றும் 'தாங்கள் அனுப்பிய செய்தி ஒரு விதமானது, நாங்கள் பிரசுரித்த செய்தி வேறொரு விதமானது என்பதை எட்டுமாத இடைவெளிக்குப்பின் நாம் எப்படி விசாரணை நடத்திக் கண்டு பிடிக்க முடியும்?'' என்றும் ஏதோ நியாயம் வழங்கக்கூடிய வர் [illegible] வேடம் பூண்டு கேட்டிருக்கிறீர்கள்.

மேலும் அவர்களுக்குத் துரோகம் செய்வதற்கு நீங்கள் முயலுவீர்கள் என்பதையும், அவ்வாறு செய்திருக்கிறீர்கள் என்பதையும் யாவரும் அறிவர், இதனாலேதான் தினபதியில் வருகிற பொய்ச் செய்திகளை 'சுதந்திரன்' இடையிடையே புட்டுக்காட்டுகிறது.

இவ்வளவுடன் நிறுத்திவிடாது ஆகஸ்ட் இரண்டாம் திகதிய அந்தச் செய்தி பற்றி ஏதோ விளக்கம் கூறவும் முயன்று, அதிலும் படுதோல்வி அடைந்திருக்கிறீர்கள்.

''ஒரு வேளை அதேசெய்தியை யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள வேறு நிருபரும் அனுப்பியிருக்கக் கூடும். இரண்டு செய்திகளைப் பிணைத்து எழுதுவதும் செய்திப் பிரிவில் சர்வ சாதாரணமாக நடைபெறுவது உண்டு' என்கின்றீர்கள்.

உண்மைதான்! அதை இல்லையென்றோ தவறென்றோ நான் சொல்ல வரவில்லை. ஆனால் அப்படி இரண்டு செய்திகளைப் பிணைத்து எழுதும் போது, அந்தச் செய்தியை அனுப்பிய இரண்டு நிருபர்களது இலக்கங்களையும் செய்தியோடு பொறித்து விடுவது தினபதியின் வழக்கம். எடுத்துக்காட்டாக 1967ம் ஆண்டு ஜனவரி 11ம் திகதி தினபதியில் இலக்கிய இரசிகர் சங்க ஆண்டுக் கூட்டச் செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது. அது நானும் புங்குடுதீவு நிருபரும் அனுப்பிய [illegible] அந்தச் செய்தியோடு எம் இருவர்களதும் நிருபர் இலக்கங்களும் பொறிக்கப்பட்டு இருக்கிறது. அதுபோன்ற இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நிருபர் இலக்கங்கள் எதையுமே ஆகஸ்ட் இரண்டாம் திகதிய எனது தினபதிச் செய்தியில் காணமுடியாது. எப்படிச் சுழியோடித் தேடினாலும் அச்செய்தியில் 192 என்ற எனது நிருபர் இலக்கத்தை மட்டுமே காணக்கூடியதாக இருக்கிறது. இதையெல்லாம்கூட தினபதி அலுவலகத்தில் செய்திக்கு இலக்கம் பொறிக்கும்போது தவறு நேர்ந்திருக்கலாம் என்று விட்டுவிடுவோம். ஆனால் அச்செய்தியில் திரு. தருமலிங்கம் அவர்கள் உண்மையில் கூட்டத்தில் பேசியதைவிடப் பேசாதவைகளே அதிகமாக இடம் பெற்றிருந்தன என்று நான் முன் கடிதத்திலேயே குறிப்பிட்டிருந்தேனே! அதற்கு என்ன சொல்ல முடியும்?

எப்போது நடந்த ஒன்றுக்காக எட்டு மாதம் கழித்து விலகிக்கொண்டது பற்றியும் கேலி செய்திருக்கிறீர்கள். உண்மை என்னவென்றால் எப்பொழுதிருந்து நான் தினபதிக்குச் செய்தி அனுப்பாமல் இருந்து வருகிறேனோ அப்பொழுதிருந்தே என்னளவில் விலகிக்கொண்டதாகத்தான் பொருள். ஆனால் எட்டு மாதம்கழித்து சென்ற ஏழாந் திகதிதான் அந்த விலகல்பற்றி முறைப்படி தங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

தங்கள் கடிதத்தின் பிற்பகுதில் இன்னொரு உதாரணமாக ''அண்ணா அனுதாபத் தீர்மானம் பற்றிப் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறிய கருத்தைத் தினபதியில் வெளியிட்டிருந்தோம். தினபதிச் செய்தியை பண்டிதர் தினகரனில் மறுத்திருந்தார்... தினபதிக்கு அவர் மறுப்பு அனுப்பினால் அதையும் பிரசுரித்து அவர் கருத்து வெளியிடுவதில் நிலையானவர் அல்லர் என்பதை நிலைநாட்டி ஆதாரங்களுடன் ஸ்தாபிக்கவும் முயல்வோம். அது முடியாவிட்டால் அவரிடம் மன்னிப்புக் கோரப் பின்நிற்க மாட்டோம்'' என்று எழுதியிருந்தீர்கள்.

உங்கள் கடிதம் எனக்குக் கிடைப்பதற்கு முன்னரே பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் அது குறித்து உங்களுக்கு மறுப்பு அனுப்பினார். அந்த மறுப்பில் நாடாளுமன்ற அஞ்சலிக்கு அண்ணா அருகதை அற்றவர் என்று தாம் கூறவில்லை எனவும், அச்செய்தி முழுப் பொய் எனவும் தாம் தினபதி சிந்தாமணி நிருபர்களுக்குப் பேட்டி கொடுக்கவில்லை எனவும் விளக்கியிருந்தார்.

நீங்கள் எனக்கு எழுதியிருந்தது உண்மையானால் அதன்படி அந்த மறுப்பை ஏன் இதுவரை தினபதியில் வெளியிடவில்லை. இந்த ஒன்றே நீங்கள் பொய்யிலே புரளுகிறீர்கள் என்பதை நிலைநாட்டப் போதுமே:

திரு. இரத்தினம் கூறியதாக நீங்கள் வெளியிட்ட அப் பொய்ச் செய்தியைத் தந்தவர்களான இரு நிருபர்களின் படங்களையும் அச்செய்தியுடன் தினபதியில் வெளியிட்டீர்கள்: இலங்கையிலுள்ள வேறு செய்திப் பத்திரிகைகள் எவையேறும் இவ்வாறு நிருபர்களின் படங்களை வெளியிட்டிருக்கின்றனவா? பேட்டி காணாத நிருபர்களையே படம் போட்டுக்காட்டினால் பேட்டி கண்டவர்களாகி விடுவார்களா? போகும் வழியில் ஒருவரை இருவர் சந்தித்தால் அது பேட்டிகாணல் என்பதா உங்கள் பத்திரிகா தர்மம்?

தமிழரசுக் கட்சியால் வளர்ந்த நீங்களும் உங்கள் செய்தி ஆசிரியரும் தமிழரசுக் கட்சியை அழித்துவிடச் சபதம் செய்து இவ்வாறு முயல்கின்றீர்கள். அச்சபதம், தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாறாகச் செய்திகளை வெளியிடுவதால் பலன் தரும் என்று எண்ணுகிறீர்கள். இத்துரோகச் செயலைச் செய்யும் உங்களுக்குப் பத்திரிகைத் தர்மம் பற்றிப் பேசவும் அருகதையுண்டா? நீங்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அது கிடைக்கவில்லை என்ற ஏமாற்றத்தால் தமிழரசுக் கட்சித் தலைவர்கள்மீது கடும் ஆத்திரம் கொண்டுள்ளதை நான் அறிவேன்; மக்களும் அறிவார்கள். அதற்காகப் புனிதமான எழுத்தையும் எழுதுகோலையும் இப்படியா தவறான முறையில் பயன்படுத்த வேண்டும்?

இங்ஙனம்,
பொ. சண்முகநாதன்


பி. கு. நான் விரும்பினால் எனது விலகல் கடிதத்தையும் அதற்குத் தாங்கள் எழுதிய பதில் கடிதத்தையும் தினபதியில் பிரசுரிக்கலாமெனெ எழுதியிருந்தீர்கள். துணிவிருந்தால் கூடவே இக்கடிதத்தையும் பிரசுரியுங்கள் பார்க்கலாம். ஆனால் தங்களுக்குப் பழக்கத்தால் ஏற்பட்டுவிட்ட வழக்கப்படி எனது கடிதத்திலும் 'உருமாற்றம்' செய்யக்கூடாது.

## தினபதியின் மற்றோர் திரிப்பு

வடபகுதியிலுள்ள பௌத்த பாடசாலைகள் மூன்றை அரசாங்கம் பொறுப்பேற்பது சம்பந்தமாக இம்மாதம் 20ந் திகதி பிரதமரைத் தமிழரசுத் தூதுக்குழு பேட்டி கண்டதல்லவா? இப்பேட்டியில் இடம் பெற்ற பேச்சுக்கள் ஒரு அறிக்கையாக எல்லாத் தினசரிகளுக்கும் கொடுக்கப்பட்டது; அதை எல்லாத் தினசரிகளும் அப்படியே பிரசுரித்திருந்தன. தினபதியும் பிரசுரித்தது - ஆனால் வழக்கமான தனது திரிப்புடன்.

தமிழரசுத் தூதுகோஷ்டி, பிரதமரிடம் மருதங்கேணி விநாயக வித்தியாலயம் போன்ற சில புதிய தமிழ்ப் பாடசாலைகளும் பொறுப்பேற்கப்பட வேண்டுமென அறிக்கை கூறுகிறது. ஆனால் தினபதியோ அறிக்கையில் கூறப்பட்ட இவ்விடயத்தை திரித்து வடபகுதியிலுள்ள ஏனைய இரண்டு பௌத்த பாடசாலைகளும் ஆசிரியர்களுடன் பொறுப்பேற்கப் வேண்டுமென பிரதமரிடம் தமிழரசார் வற்புறுத்தியதாக முழுப்பொய் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்பொழுது காட்சி தருகிறது!

இங்ஸ்லி (கொழும்பு) சப்பயர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) ஜுப்பிட்டர் (குருணாகலை)

○ ஜெயசங்கர், ○ ஜெயலலிதா நடிக்கும்

# பொம்மலாட்டம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்) ராஜா (நீர்கொழும்பு)


4வது வாரம்

# அதே கண்கள்

ஈஸ்மன் கலர்

## 4வது ஜனத்திரள் வாரம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருமலை)



ஜெய்சங்கர், டி.கே. பகவதி, எஸ். வரலட்சுமி
முத்துராமன், கிருஷ்ணகுமாரி, வி.எஸ். ராகவன்
சகுந்தலா, நாகேஷ், மற்றும் பலர் நடித்த,

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்


# உயிரா? மானமா?

கதை-வசனம்—டைரக்ஷன் க. எஸ். கோபாலகிருஷ்ணன், —(பாஸ்கள் ரத்து)— இசை: 'மெல்லிசை - மன்னன்' எம். எஸ். விஸ்வநாதன்

## இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெபிட்டி (கொழும்பு) விலாசினி (தெகிவளை) இம்பீரியல் (மட்டுநகர்)

★ ஜெய்சங்கர்
★ கே.ஆர். விஜயா
★ அசோகன்
★ நாகேஷ்
★ மணிமாலா
★ மனோரமா
★ சுந்தரராஜன்
—நடிக்கும்—



# பால் மணம்

## 5வது வெற்றி வாரம்!

செல்லமகால் (கொழும்பு)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா நாகேஷ் நடிக்கும்

# கலாட்டா கல்யாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம் வருட மே மாதம் 31-ந் திகதி சனிக் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி: 23411